பிஸ்மில்லாஹிற் ரஹ்மானிற்ரஹீம்.

# ஆரியமதத்தின் அந்தரங்கம்.

இஃது

இந்திய முஸ்லிம்களின் மூதாதைகள் இஸ்லாம் மதம் தழுவியது பெண்ணாசையாலும் வாளுக்குப்பயந்துமென "ராவல் பண்டிலிலுள்ள சர்மா M. A. என்பவரால்" எழுதப் பட்ட நூலுக்கு மறுப்பாக காலி மஹ்மூது (தாம்பால்) B A. என்பவரால் உர்து பாஷையி லெழுதப்பட்ட நூலை

கோளும்பு

அஞ்சுமனே தப்லீகுல் இஸ்லாம் சங்கத்தின்

அக்கிராசனர்

ஜனாப் A. S. அப்துல்கப்பார் சாஹிபு அவர்கள்

தமிழில் மொழிபெயர்த்ததை

தேன்காசி, முஸல்மான்

ஆசிரியர்

ஜனாப் மீ. இ. முகம்மது அப்துல்காதிர் சாஹிபு

அவர்களால்

திருநெல்வேலி

மீரானியா அச்சுக்கூடத்தில் பதிப்பித்து

வெளியிடப்பட்டது.

முதற் பதிப்பு பிரதிகள் 1000.

முஹர்ரம் 1346

1927

OFFICE OF THE RE[GISTRAR] 7-OCT 19[..] MADRAS
QZ
N25
17754

மீரானியா பிரின்டிங் பிரெஸ்,
மேலரதவீதி, திருநெல்வேலி.

OCT 192
MADRAS

# முன்னுரை.

கனம் மிக்க அன்பர்களே! எம்பரிசுத்த தீனுல் இஸ்லாம் என்ற மதமானது நாளுக்குநாள் அபிவிருத்தியடைந்து இன்றைக்கு கொடிய விரோதியாயிருந்தவர் மறுநாள் இஸ்லாத்தில் சார்ந்து தீயவழியில் அழைத்துச் செல்லும் தமது முந்தின மதத்தைக் கண்டனஞ் செய்வதையும் இஸ்லாம் மதத்தின்மீது பிறர் செய்யும் ஆக்ஷேபங்களுக் கெல்லாம் அப்போதைக்கப்போதே தகுந்தவிடையிறுத்து பிறரின்வாயை அடக்கி யொடுக்கி வருவதையும் கண்ணுற்ற இதர சமயவாதிகள் திகில்கொண்டு நியாயமான முறையில் ஆக்ஷேபஞ்செய்பவோ சத்தியவேதத்தை யாராய்ந்து அதிற் சாரவோ மனமில்லாது வருந்தி, பொய்யும், கபடும், வஞ்சகமும் அற்பத்தனமான வசை மொழிகளாலும் நிறம்பப் பெற்ற விஷமப் பிரசாரங்களைப் புரிந்து அமைதிக்குப் பங்கம் விளைவித்துக்கொண்டிருக்கின்றனர். இத்தகைய விஷமப் பிரசாரத்தில் கிறிஸ்தவர்களும் ஈடுபட்டிருப்பினும் தயானந்த சுவாமி யென்னும் கொடிய இஸ்லாத்தின் விரோதியைப் பின்பற்றின ஆரியக்கூட்டத்தினரே முதன்மைபெற்று நிற்கின்றனரென்பது வெள்ளிடை மலைபோல் விளங்கா நிற்கின்றது. இந்தியாவில் நிகழ்ந்துவரும் அமைதியின்மைக்கு இவர்களது தீயப்பிரசாரங்களும் கிரந்தங்களுமே முக்கிய காரணமெனலாம்.

இவ்வாரியர் தாம் சொற்ப தொகையினராதலால் முஸ்லிம்களை யடக்கவும் மிகைக்கவும் இயலாதெனக் கருதி பெருந்தொகையினரான ஹிந்துக்களையும் தங்களுக்கு பக்க பலமாகச் சேர்த்துக்கொண்டு ஒரே முகமாகத் தாக்க ஆரம்பித்திருக்கின்றனர். நியாயமற்ற இம்முறையில் இவர்கள் தாக்குவதனால் இஸ்லாத்தை நசுக்கிவிடலாமென நினைத்து மனப்பால் குடித்து மகிழ்கின்றனர் எனினும், ஹிந்து ஆரியமத அந்தரங்கக்கூற்று அதிசீக்கிரம் வெளியாகி விக்கிரக வணக்கத்திலும் மற்றும் அந்தகார அநுஷ்டானத்திலும் ஈடுபட்டிருக்கும் வகுப்பினர் சத்திய சன்மார்க்கமான இஸ்லாமிய தர்மத்தில் அதிசீக்கிரத்தில் சார்ந்து தங்களது முந்தின மதம் மனிதர்களுக்கு மோக்ஷவழி காட்டக்கூடியதல்லவெனக் கண்டனம் செய்வார்களென்பதற்கு ஹிந்து ஆரியமதப் பண்டிதர்களே சாக்ஷியாக விருக்கின்றனர்.

ஆரியர் இந்துக்களுக்கு கொடிய பகைவர்களென்றும் ஹிந்து மத சித்தாந்தங்களையும் வேதசாஸ்திர புராண அநுஷ்டானங்களையும் உபயோகமற்ற கட்டுக் கதையெனக்கூறி வெகு அலக்ஷியமாகப் புறக்கணித்திருப்பதையும் விக்ரஹ வணக்கம் அந்தகாரத்திலாழ்த்தக்கூடி கொடிய துர்ச்செயலென்றும் கூறி ஹிந்துமத அடிப்படையை தாக்கிவரும் கபடச் சூழ்ச்சிகளை ஹிந்துக்கள் அறியாமற்போனது பெரும் வியப்பை விளைவிக்கின்றது.

ஹிந்துக்களும் தனது அன்பான வேதசாஸ்திர விதிகளையொருபக்கல் ஒதுக்கி வைத்துவிட்டு ஆரியருடன் சேர்ந்து தாழ்ந்த வகுப்பார்களையும் பிறமதஸ்தர்களையும் சுத்திசெய்து தங்களது மதத்திற் சேர்த்துவருவது கொண்டு தங்களது வேதம் மனித இயற்கைக்குப் பொருத்தமா யமைக்கப்படாததும் உபயோகமற்றதுமென தாங்களாகவே நிரூபித்து வருவது இஸ்லாத்தின் ஓர் பெரிய அற்புதமென்பது மிகையாகா. இஸ்லாத்தைத் தாக்க ஆரம்பிக்கு முன்பே தங்களது மதத்தை கைநழுவ விட்டு விட்டதே இதற்கு தகுந்த சான்றாகும்.

ஒரு மதத்தைப்பற்றி ஆராய்ச்சியிடவோ, ஆக்ஷேபிக்கவோ சந்தேகத்தை நிவர்த்தித்துக்கொள்ளவோ, எவருக்கும் உரிமையுண்டு. இவ்வுரிமையை பொய், கபடம், வஞ்சகம், வீண்பழி சுமத்தல், பிடித்ததையே சாதித்து முரணி நிற்றல், இதர மதவாதிகளின் பெரியார்களையும் குருக்களையும் அற்பத்தனமான வசைமொழிகளால் தாக்கல், ஆகிய இவ்விஷயங்களில் உபயோகிப்பதை அறிஞரில் எவரும் ஏற்றுக்கொள்ளமாட்டா ரென்பது திண்ணம். ஆரியகுரு தயானந்த சுவாமியாரால் வரையப்பட்ட சத்யார்த்த பிரகாஷமென்னும் நூல் இதற்கு சான்றாகும்.

எனவே, ஆரியரின் இவ்வியக்கத்தைக் கையாண்டுவரும் ஹிந்துக்களில் பலர் இஸ்லாத்தை ஒழுங்கீனமாக தூஷித்திருப்பதுபோல் வர்மாஜீ எம். எ. (ஹிந்து) என்பவரும் "இஸ்லாம் மதம் வாளாலும், பெண்ணாசையாலும், பலாத்காரத்தாலும் இந்தியாவில் பரவினதென்று எங்கள் மூதாதைகள்மீது சிறிதும் பொருத்தமற்ற ஆபாச பதர்மொழி நிரம்பிய நீண்டதோர் வியாசம் பத்திரிகைகளில் வரைந்திருக்கின்றார்". இவ்வியாசம் சுத்த

177542

தவறும் முழுப்புரட்டும் என்பதை நிரூபிப்பதுடன் எங்கள் முன்னோர் பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசையால் இஸ்லாம் மதம் தழுவவில்லை. எனினும், ஹிந்து மதத்தில் நிறைந்து மலிந்து கிடக்கும் ஆபாச அனுசாரங்களையும் ரிஷிகள் ஒருவருக்கொருவர் மனைவிகளை திருட்டுத்தனமாக விபசாரம் புரிந்த கூற்றையும் விக்கிரகவணக்கத்தின் தவறுகளையும் நன்காராய்ந்த பின்னரே இந்து மதத்தை விட்டு நீங்கி இஸ்லாம் மதத்தில் சார்ந்து இகபாமிரண்டினு மோக்ஷம் பெற்றார்களென்பதை பகுத்தறிவுக்கு பொருத்தமாக யாவரும் அங்கீகரிக்கத்தக்கவாறு ஆரியமதத்திலிருந்து இஸ்லாத்தில் சார்ந்த லூதியானுவாசி காஜீ மஹ்மூது தஹரம்பால் பி. ஏ. என்பவர் "குபுர்தோடு" என ஓர் நூல் இயற்றியுள்ளார். அந்நூல் முஸ்லிம்களுக்கும் உண்மையை உணர விரும்பும் ஹிந்து ஆரியர்களுக்கும் நற்பலன் தரக்கூடுமெனக் கருதி அதன் பல பிரிவுகளின் சுருக்கத்தை "கொளும்பு அஞ்சுமன் தப்லீகுல் இஸ்லாம் சங்கம்" அக்கிராசனர் ஜனாப் ஏ. எஸ். அப்துல்கப்பார் ஸாஹிபு அவர்கள் அரும்பிரயாசையுடன் தமிழில் மொழிபெயர்த்து முஸல்மான் ஆபீஸிலிருந்து அச்சியற்றும்படி யனுமதியளித்தனர் இதில் மெச்சத்தக்க விஷயமென்னவெனின் எங்கள் முன்னோர் மீது வீண்பழி சுமத்திய வர்மாஜீ எம். ஏ. என்பவரால் அதி விசேஷமாக வியந்து பாராட்டப்பெற்ற ஆரியகுரு சுவாமி தயானந்த சரஸ்வதியாரின் "சத்யார்த்த பிரகாச"மென்னும் நூலைக் கொண்டே மேற்கூறிய வர்மாஜீ எம். ஏ. என்பவரின் ஆதாரமற்ற கூற்றுக்குப் பதிலிறுக்கப் பட்டிருக்கிறது.

இந்நூலை ஆதியோடந்தமாக வாசிக்கிறவர்களுக்கு ஆரிய மதக் கூற்றுகள் செவ்வனே விளங்கி விடுவதுமன்றி அம்மதத்தின் தவறுகளை எடுத்தியம்பக்கூடிய வன்மையும் உண்டாய்விடுமென்பது நிச்சயம். இவ்வாறு உணர்ந்தபின் உண்மையை எங்கும் பரவச்செய்ய முயற்சிப்பதுடன் வேடிக்கைக்காக ஒரு வார்த்தையும் உரையாதிருப்பதே உத்தமருக் கழகென்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இஸ்லாம் மார்க்கப் பிரசாரம் புரியவும் எனையோரின் சந்தேகங்களை நிவர்த்திக்கவும் இத்தகைய பல கிரந்தங்கள் இயற்றி இன்னும் இயலாதார்களுக்கும் இதர மதஸ்தர்களுக்கும் இனமாக

யளிக்கும் அவசியமேற் பட்டிருப்பதனல் நம்மார்க்கப் பிரசாரத்தின்மீது அபிமானங்கொண்ட தருமகுணசீலர்கள் முன்னுக்குவருவார்களென எதிர்பார்க்கிறேம். எனவே, இச்சிறிய கிரந்தத்தால் எம்மிஸ்லாமியரும் ஏனையோரும் பெரும் பயனடையுமாறு எல்லாம் வல்ல ரஹ்மான் கருணைகூர்ந்தருள்வாளுக. ஆமீன்.

இங்ஙனம்
இஸ்லாத்தின் ஊழியன்
**மீ. இ. முஹம்மது அப்துல்காதிர்,**
"முஸல்மான்" ஆசிரியன், தென்காசி.

---

## பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| முகவுரை | 26 | மறுப்பாவே | மறுப்பாகவே |
| 2 | 4 | வைக்கேட்கவே | 'வை' நீக்கிவிடவும். |
| 4 | 16 | பிரார்த்தித்தும் | பிரார்த்தித்ததும் |
| 5 | 12 | கூடப்படு | கூறப்படு |
| 8 | 24 | வண்ணத்திரிடன் | வண்ணத்திபுடன் |
| 21 | 2 | பாகதச் | பாதகச் |

# முகவுரை.

சகோதரர்காள்!

தாங்கள் வாசிக்கப்போகும் இச்சிறு நூலானது "காஸிமஹ்மூத்(தரம்பால்)B. A. அவர்களால் உர்துபாஷையில் எழுதப்பட்ட "குப்ர்தோடு" என்னும் நூலின் 4, 5, 9, 10, 11, 12-ம் பாகங்களின் சாராம்சமாகும். "காஸிமஹ்மூத் தரம்பால" என்பவரின் முன் பெயர்"அப்துல்கபூ"ராகும்; இவர் இஸ்லாமதத்தைத் துறந்து ஆரியசமாஜத்தில் சேர்ந்துக்கொண்டு "தரம்பால்" என்ற நாமத்துடன் இஸ்லாமதத்திற்கு விரோதமாக அநேக நூல்களை இயற்றியுள்ளார். இவரால் இஸ்லாத்திற்கு விரோதமாக எழுதப்பட்ட ஒவ்வொரு நூலுக்கும் தக்கமறுப்புகள் "அஹ்லஹதீஸ்" பத்திரிகையின் ஆசிரியர் அல்லாமா ஸனுவுல்லா சாஹிப் அவர்களால் எழுதப்பட்டதின் காரணமாக, நம் தரம்பால் ஆரியசமாஜத்தைத் துறந்து மீண்டும் இஸ்லாமதத்தில் சேர்ந்துகொண்டு காஸிமஹ்மூத்—தரம்பால் என்ற நாமத்தைப் பெற்றார். மால்கான முஸ்லீம்களை முர்த்தத்தாக்க (அ)சுத்திசெய்ய) சுவாமி சிரத்தானந்தரால் செய்யப்பட்ட கிளர்ச்சி சமயத்தில், ஆரியர்களின் வாயடைபடும் படியாக (நம் காஸிமஹ்மூத்-தரம்பால்) அநேக நூல்களை எழுதினார். அவ்வற்றுள் ஒன்றுதான் யாம் மேலே காட்டியுள்ள, "குப்ர்தோடு" என்னும் நூலும்.

இந்திய முஸ்லிம்களின் மூதாதைகள் இஸ்லாமதத்தை ஒப்புக்கொண்ட காரணங்களில் ஒன்றுவது, பெண்ணாசையைக்கொண்டென்பதாகுமென்றும், முஸ்லிம்கள் (முன் இந்துக்களாயிருந்தவர்கள்) பெண்ணாசையினாலும், வாளாயுதத்துக்கு பயந்தும் இஸ்லாம் மதத்தை தழுவினார்களென்று "ராவல்பிண்டி"யிலுள்ள சர்மா M. A. என்பவர் பத்திரிகைகளில் எழுதிவந்தார். இதற்கு மறுப்பாவே "குப்ர்தோடு" என்னும் புத்தகமும் வரையப்பட்டது. இப்புத்தகத்தில் 4, 5, 9, 10, 11, 12-ம் பாகங்களில் ரிஷி தயானந்தரால் எழுதப்பட்ட, "சத்தியார்த்தப் பிரகாசம்" என்ற நூலிலிருந்தும்,பண்டிதர் லேக்ருமால் எழுதப்பட்ட"குல்லியாத்—ஆரியாமுஸாபர்" என்ற நூலிலிருந்தும் மேற்கோள்களாக ஹிந்து தேவர்களின் துர்நடத்தைகளையும், ஹிந்துவேதப் புராணங்களின் துர்ப்போதனைகளையும், விபசாரம், இச்சைபோல் செய்யும்

வழிகளையும் எடுத்துக்காட்டி, இந்திய முஸ்லிம்களின் மூதாதைகள் சிற்றின்பக்காரர்களா யிருந்திருப்பார்களாயின், ஹிந்து வேத புராணங்களில் அவர்கள் மனஇச்சைப்படி துர்நடத்தைகளில் ஈடுபட அனுமதியிருக்க, துர்நடத்தைகளுக்குக் கொஞ்சமேனும் இடங்கொடுக்காத பரிசுத்த இஸ்லா மதத்தை ஒப்புக்கொள்ளக் காரணமேயில்லை யென்றும்; இந்திய முஸ்லிம்களின் மூதாதைகள் பக்திமான்களாகவும், நாணமுடையவர்களாகவும், இருந்தபடியால், துர்நடத்தைகளில் ஈடுபட்டு நடக்க அனுமதியளிக்கும் (அசத்தியம் நிறைந்த) ஹிந்து வேதசாஸ்திர புராணங்களை வெறுத்து சத்திய சன்மார்க்க நல்லொழுக்கங்களைப்போதிக்கும் பரிசுத்த இஸ்லாம் மதத்தைத் தழுவினார்களென்று வெகு அழகாக ரூபித்துக்காட்டப் பட்டிருக்கிறது. மேலும் நம் வாசகர்களின் சௌக்கியத்தை யொட்டி, உர்து "சத்தியார்த்தப் பிரகாச"த்திலுள்ள விஷயங்களுக்கு தமிழ் மொழிபெயர்ப்பின் அத்தியாயம், பக்கங்களையும் காட்டியுள்ளோம். மேலும் இதிலுள்ள சில ஹிந்து பெரியார்களின் பெயர் எமக்கு சரிவர தமிழில் தெரிந்துகொள்ளக் கூடாததால், உர்துவிலுள்ளபடியே இங்கு எடுத்தெழுதியிருக்கிறேன்; தெரிந்த அன்பர்கள் திருத்தி வாசித்துக்கொள்வார்களாக.

ஆங்காங்கு காணப்படும் சொற்சோர்வுகளையும் எழுத்துப் பிழைகளையும் பொருட்படுத்தாது குற்றங்களைந்து குணத்தையே கைக்கொள்ளுமாறு நம் வாசகர்களை வேண்டிக்கொள்கிறேன்.

முஸ்லிம்களுக்கும் பொதுவாக நம் ஹிந்து ஆரிய சகோதரர்களுக்கும் பிரயோஜனமுண்டாகுமென நம்பியே தமிழில் அப்புத்தகத்தின் 4, 5, 9, 10, 11, 12-ம் பாகத்தின் சாராம்சத்தையும் மொழிபெயர்த்துள்ளேன். எமது ஹிந்து ஆரிய நண்பர்களுக்கு ஆண்டவன் நேர்வழி காட்டுவானாக! ஆமீன்.

காதிமுல் இஸ்லாம்
**A. S. அப்துல்கப்பார்**
அக்கிராசனர்,
(கொழும்பு) அன்ஜுமனே தப்லீகுல் இஸ்லாம்.

"Shibli Manzil"
Princes Gate, Colombo.
**1st April 1927.**

بسم الله الرحمن الرحيم

# ஆரிய மதத்தின் அந்தரங்கம்.

## நிர்வாண ரூபம்.

எங்கள் மூதாதைகளின் மகிமையின் மீது சுமத்தப்பட்ட பழிக்கு மறுப்பாக "உயிருள்ள சாட்சியும்" "உயிரற்ற சாட்சியும்" காட்டிவிட்ட பின்னுல் எங்கள் மூதாதைகள் ஹிந்து மதத்தை துறந்து இஸ்லாத்தைத் துயர்ந்ததேன் என்னும் விஷயத்தை விபரிக்கப்படும்.

எங்கள் மூதாதைகள் ஹிந்து மார்க்கத்தின் 'நிர்வாணரூபத்தை'க்கண்டு லஜ்ஜையும், வெட்கமும், நாணமும் கொண்டவர்களாக ஹிந்துமதத்தைவிட்டு இஸ்லாமதத்தைத் துயர்ந்தார்களென்பதே காரணம். ஹிந்துசமயத்திலுள்ள "இந்நிர்வாணரூபம்" என்னவாயிருந்தது? எப்படிப்பட்டதாயிருந்தது? என்பதைப்பற்றி யாமொன்றும் ஈண்டு கூறத்துணியோம். எனினும் ஆரியசமாஜியின் பெருமையும் சுவாமி சிரத்தானந்தரால் வெகு வாய்ப்புகழப்பட்டவருமாகிய பண்டிதர்லேக்ருமுடைய (குல்லியாத்ஆரியா முஸாபரின்) சொந்த வார்த்தைகளையே எடுத்துக்காட்டுவோம்.

நம் சுவாமி எழுதுகிருர்:—

எங்கள் ஹிந்து சகோதரர்கள் புராணங்களுக்குப் பெரும் மரியாதை செய்கிருர்கள். மேலும் அவற்றின் போதனைகளை வெகு பிரியமாய்க் கேட்கிருர்கள். தங்கள் உடல், பொருள், ஆவியையும் அதிகமாக அவைகள்மீது அர்ப்பணம் செய்வதைவிட்டும் பின்வாங்கமாட்டார்கள். உண்மையை நோக்கும் போது அவர்கள் எதார்த்தத்தின் பக்கம் முன்னேக்குகிருர்களில்லை. இதற்காகவேண்டி இவர்கள் சமுகத்தில் சில விஷயங்களைக் கூறிவிடுவது உசிதமென நினைக்கிறேன்.

"பிரஹஸ்பதி" "சந்திரதேவ"னுடைய குருவாயிருந்தார். பிரஹஸ்பதியின் மனைவி "தாரு" "சந்திரதேவ"னுடைய வீட்

டுக்குப்போனுள். இருவரும் காமத்தில் மூழ்கி வருடக்கணக்காகத் துர்க்கிரிகைகளிலீடுபட்டிருந்தார்கள். பிரஹஸ்பதி தன் மனைவி தாருவைத் திரும்பப்பெற்றுக்கொள்ளும் பொருட்டு சந்திரதேவனின் வீட்டுக்குப்போய் "தாருவை"வைக் கேட்கவே "சந்திரதேவன்" தாருவைக்கொடுக்க மறுத்துவிட்டான். பிரஹஸ்பதி (சந்திரதேவனை நோக்கி) "நீ பெரும்பாவியாயிருக்கிருய்" என்ருர். அதற்கு சந்திரதேவன் 'நீர் பெரிய தர்மத்தைக் கடைப்பிடித்த பெரியவர்போலும், நீர் உமது சிறிய தமையனின் மனைவியை உமது வீட்டில் போட்டுக்கொண்டீர் எவ்வாறு யான் அழகு சௌந்தர்யம் வாய்ந்தவனுயிருக்கிறேனே அவ்வாறே உமது மனைவியுமிருக்கிருள். ஆகையால் அவள் எனக்கே சரியானவளன்றி உன்போன்ற அவலட்சணமுடையவனுக்கன்று' என்று கூறினுன்.

உடனே **பிரஹஸ்பதி** இவ்விஷயத்தை தேவேந்திரனிடம் சென்று முறையிட்டார். தேவேந்திரன் தனது ஆட்களில் ஒருவனை சந்திரதேவனிடம் பிரஹஸ்பதிக்கு பெண்ணைக்கொடுத்து விடும்படி சொல்லியனுப்பினுர். இதற்கு சந்திரதேவன் கூறியதாவது: "தேவேந்திரனே மற்றவர்களுக்குப் போதனைசெய்கிருர். எனினும் தனது சொந்தவிஷயத்தைப்பற்றி தேவேந்திரன் கொஞ்சமும் கவனிப்பதில்லை. அவன் கௌதமரிஷியின் மனைவி அகலிகையுடன் ஏன் விபசாரஞ்செய்தான்." மேலும் அவர் ஏன் ஆயிரவருடங்களாக ஆயிரம்யோனியாளராயிருந்தார்? ......"இவ்விஷயத்தை தேவேந்திரன் அறிந்ததும் வெகுகோபாவேசத்துடன் சந்திரதேவனுடன் யுத்தத்திற்கு கிளம்பினுர். தேவேந்திரனுடன் உதவிக்கு பிரம்மாவும் சந்திரதேவனுடைய உதவிக்கு "விஷ்ணு"வும் "மஹா தேவனும்" வந்து சந்திரதேவனை நோக்கி "எச்சரிக்கை! பிரஹஸ்பதிக்குப் பெண்ணைக் கொடுக்கவேண்டாம்" என்று கூறினுர்கள். பிரம்மா "பெண்ணைக்கொடுத்துவிடும் இது பெரும்பாபமாகும்" என்ருர். இதற்கு விடையாக "பிரஹஸ்பதி ஸ்மிர்தியில் வேதந்தை ஓதுவதால் பிராமணனுடைய பாவம் போய்விடுவதுபோல் விபசாரஞ்செய்யும் ஸ்திரியின் பாவமும் மாதத்தீட்டு வரும்போது போய்விடு"மென்று கூறப்பட்டிருக்கிறது என்று அவரே வரைந்துள்ளாரென்று சந்திரதேவன் கூறினுர். சுருங்கச் சொல்லுமிடத்து

அநேக வருடகாலமாக யுத்தங்கள் நடைபெற்று இறுதியில் விஷ்ணுவின் வேண்டுகோளுக்கிணங்கி சந்திரதேவன் தாருவைப் பிரஹஸ்பதிக்குக் கொடுத்தான். அவளைப் பிரஹஸ்பதி வெகு சந்தோஷத்தோடு எடுத்துக்கொண்டுபோனார். எனினும் தாருவோ அவ்வமயம் கெர்ப்பவதியாயிருந்தாள். பிரஹஸ்பதியின் வீட்டுக்குப்போய் சில நாளையில் ஓர் ஆண்குழந்தையைப் பெற்றாள். இக் குழந்தையின் பெயர் "பௌதமதேவர்" என்று வைக்கப்பட்டது. இக்குழந்தையை சந்திரதேவன் பிரஹஸ்பதியிடமிருந்து கேட்க, பிரஹஸ்பதி குழந்தையைக் கொடுக்காததால் மீண்டும் இருவருக்கிடையில் பலத்த யுத்தங்கள் நடக்க ஆரம்பித்து கடைசியில் இவ்விஷயத்தை யுணர்ந்த பிர்மா தேவி தாருவிடம் சென்று "யாரைக்கொண்டு கெர்ப்பமானு" யென வினவ "சந்திரதேவனைக் கொண்டு கெர்ப்பமானேன்"னென அவ்வம்மை சொல்லவே, பௌதமதேவரை சந்திரதேவனுக்கு கொடுக்கப் பட்டது" என **தேவீபாகவதம்** என்னும் புராணத்தில் வருகின்றது.

"வசு" என்பவர் காட்டுக்கு வேட்டையாடப் போனசமயம் தன்மனைவியின் எண்ணமுண்டாகவே அவருக்கு ஸ்கலிதமாயிற்று அவர் தனது ஸ்கலிதமான இந்திரியத்தை ஓர் இலையில் வைத்து ஒரு பக்ஷியின் மூலமாக தன் மனைவிக்கு அனுப்பிவைத்தார். விந்தைச் சுமந்துகொண்டுபோகும் பக்ஷிக்கும் வேறொரு பக்ஷிக்கும் (ஜம்னாநதிக்குமேல்)யுத்தம்நடக்கவே விந்தானது நதியில் விழுந்துவிட்டது. ஜம்னாநதியில் விழுந்த அவ்விந்தை ஓர் மீன் விழுங்கிற்று (இந்த மீன் ஓர் வனதேவதை இது ஒரு ரிஷியின் சாபத்தால் மீனாகமாறியது) விந்தை விழுங்கியதும் கெர்ப்பம் தரித்துவிட்டது. கெர்ப்பகாலம் நிறைவேறியதும் அவ்வனதேவதை (மீன்) ஓர் செம்படவன் கையில் அகப்பட்டது. செம்படவன் அதன்வயிற்றைக்கீறவும் அதில் ஓர் ஆண்குழந்தையும் பெண்குழந்தையுமிருந்தது. அவ்விருகுழந்தைகளையும் வசு என்னும் ராஜனிடம்கொண்டுபோகவே ராஜன் ஆண்குழந்தையைத் தான் எடுத்துக்கொண்டு பெண்குழந்தைபை செம்படவனுக்குக் கொடுத்துவிட்டான். செம்படவன் அக்குழந்தைக்கு(குழந்தையின் சரீரத்தில் மீன் நாற்றமிருந்ததால்) மச்சகந்தி யென்று பெயரிட்டு வளர்த்து வந்தான். அவள் பெரிதானதும் செம்படவனுடைய

படகில் ஆள்க்களேற்றி அக்கரைப்படுத்துவதில் உதவிபுரிந்து வந்தாள். அவ்வாறு நடந்துகொண்டு வரும்போது ஒருதினம் பராசரர் (வேதங்களை அறிந்தவர்) அங்கு வந்து படகிலேறி அக்கரைபோக நாடினர். நம் சுவாமி வரும்சமயம் செம்படவன் சாப்பிட்டுக்கொண்டிருந்தபடியால் மச்சகந்தியிடம் சுவாமியை அக்கரை சேர்க்கும்படி சொல்லவே சுவாமியும் படகில்ஏறி படகு நதியின் மத்தியில் வரவும் முனிவருக்கு மோகமுண்டாகி மச்ச கந்தியின் வலது கையைப்பிடிக்க அவள் மறுத்து சுவாமியா ருக்கு அநேக நற்போதனைகளைச் செய்தாள். (மோக வெறி கொண்டு நிற்கும்) மகாத்மாவுக்கு ஒரு நற்போதனையும் பயன் படவில்லை. மீண்டும் மச்சகந்தி தன் சரீரம் மீன்நாற்றமாயிருக் கிறதென்று கூற உடனே சுவாமி ஆசீர்வதிக்கவும் மீன்நாற்றம் மாறி பரிமளமுண்டாயிற்று. (இதற்குப்பிறகுதான் மச்சகந்தி யென்ற பெயர்மாறி, பரிமளகந்தியென்ற பெயருண்டாயிற்று.) பிறகு "தகப்பனர் கரையில் நின்று பார்த்துக்கொண்டிருக்கிறு" ரென்ருள். உடனே ரிஷி பிரார்த்தித்தும் எங்கும் காரிருள் சூழ்ந்துகொண்டது. பின்பு மச்சகந்தி சுவாமியை நோக்கி "உங் கள் காரியத்தை முடித்துக்கொண்டு நீங்கள் போய்விடுவீர்கள் எனது கன்னிகைத்தனம் போய்விடுமே என்னை யார் ஒப்புக் கொள்வார்கள்" என்ருள். இதற்கும் ரிஷிபிரார்த்தனை புரிந்து "உனது கற்பு அழியாது" என்று கூறினர். இவ்வளவு உடன் படிக்கைகளுக்குப்பின் ரிஷி அவளைப் புணர்ந்தார். உடனே ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அதற்கு **வியாசர்** என்ற நாமம் சூட் டப்பட்டது. ரிஷியும் போய்விட்டார். வியாசரும் (தாயிடம்) உத்தரவுபெற்றுக்கொண்டு காட்டுக்குப் போய்விட்டார். பின்பு மச்சகந்தியை ஒருவன் விவாகஞ்செய்து இரண்டு (ஆண்) பிள்ளை களைப் பெற்ருள். இரண்டு பெயர்களும் இறந்தபின் இவர்களின் மனைவிமார்கள் விதவைகளாகிவிட்டார்கள். தாயாரின் ஏவலின் மீது **வியாசர்** இவ்விதவைகளுடன் (நியோகம்) சேர்ந்து இதன் பலனுக **திருதராஷ்டிரன்,** குருடனுகப் பிறந்தான். இரண்டாவது பாண்டுராஜன் பிறந்தான் மூன்ருவது விதுரராஜன் பிறந்தான்.

(இவ்விஷயத்தின் விரிவை பண்டிதர் லேக்ருமால் எழுதி சிரத்தானந்தரால் அச்சிடப்பட்ட 'குல்லியாத் ஆரியாமுஸாபர்;' பக்கம் 188-19-ல் பார்க்கவும்).

"புராணங்களில் ரிஷிகள், முனிவர்கள், தேவர்கள் மீது கண்டிக்கக்கூடியதும் அசத்தியமான வடுக்களும் காணப்படுகின்றன. பிர்மா தன் மகளைப்புணர்ந்ததாகவும், கிருஷ்ணன் ராதையுடனும், மஹாதேவர் ரிஷிகளின் ஸ்திரீகளுடனும், விஷ்ணு ஜலந்தரின் மனைவியுடனும், இந்திரன் கௌதமரின் மனைவியுடனும், சந்திரதேவன் தன் குரு பிரகஸ்பதியின் மனைவியையும், வாயுதேவர் கேசரின் மனைவியுடனும், வசான் தேவர் அகஸ்தி தேவரின் தாயுடனும்,பிரகஸ்பதி தன் சகோதரன் மனையுடனும், விஸ்வாமித்திரர் மேனகையுடனும், பாராசரர் மச்சகந்தியுடனும், துரௌபதை பஞ்சபாண்டவர்களுடனும் விபசாரம் செய்ததாகவும் ஸ்ரீராவணன் தனது சகோதரனை வஞ்சகமாகக் கொன்றதாகவும் கூடப்படுகின்றன". (குல்லியாத் ஆரிய முஸாபர் பக்கம்: 188)

சர்மாஜீயின் பழிமொழிகளை மறுக்க சுவாமி சிரத்தானந்தரின் ஏற்பாட்டால் ஸ்தாபிக்கப்பட்ட "ஆரியாமுஸாபிரி" லிருந்து மேற்கூறியவைகளை எடுத்துக்காட்டியுள்ளோம். சர்மா, ஹிந்து சமூகத்துடையவும் ஹிந்து தர்மத்துடையவும் ஓர் பெரும் ஊழியனாகவும் சிரத்தானந்தரின் சிறந்த பக்தனுமாயிருப்பதாகத் தெரியவருகிறது. தேவர்களும், ரிஷிகளும், மகாத்மாக்களும், மஹா ரிஷிகளும் பகிரங்க விபசாரமும் அடாச் செய்கைகளும் செய்கிறவர்களாகவும் விவாகம் பண்ணிய ஸ்திரீகளைத் திருடிக்கொண்டு போகிறவர்களாகவும், தங்கள் பெண்மக்களுடன் பலவந்தமாகப் புணர்கிறவர்களாகவும், மதுபானமருந்துகிற வர்களாகவும், சூதாடுகிறவர்களாகவும், சூதாடுமிடங்களில் பந்தயத்திற்காக தன் பெண்சாதிமார்களை வைக்கிறவர்களாகவும், தனது குருவின் மனைவியுடன் விபசாரஞ்செய்ய அஞ்சாதவர்களாகவும் விபசாரஞ் செய்த ஸ்திரீக்கு மாதத்தீட்டு வந்தால் பாவமழிந்துபோகுமென்ற மார்க்கத்தீர்ப்பளிக்கும் இப்படிப்பட்ட மதம், நாணமுள்ள பக்தி நிறைந்த எங்கள் மூதாதைகள் ஒப்புக்கொள்ளக்கூடிய மதமாமென்று யான் சர்மாவிடம் வினவுகிறேன். எங்கள் மூதாதைகள் இப்படிப்பட்ட மானங்கெட்ட (ஹிந்து) மதத்தை ஒருபோதும் ஒப்புக்கொண்டிருக்க மாட்டார்கள். எங்கள் ஜீவிய காலத்தில் எங்கள் கண்முன்பாக தாயானந்தர், பண்டிதர் லேக்ரும் முதலியோர் பிராமணர்களாயிருந்தும், இவர்கள்மீது எத்தகைய வாளாயுதத்தை உபயோகிக்கப் படாதிருந்தும், இவ்வெட்கங்கெட்ட

ஆரிய மதத்தை உதைத்துத்தள்ளி இதன் அந்தரங்க சூழ்ச்சிகளை பகிரங்கப்படுத்த கடமையுடையவர்களாயிருந்து வந்தார்கள். இத்தகைய தயானந்தர், பண்டிட்லேக்ரும் இவர்களைவிட எத்தனையோ மடங்கு நாணம், வெட்கமுள்ள எமது மூதாதைகள் தங்கள் மனைவிகளை பதினொரு இதர ஆடவர்களுடன் புணரவிட ஒருபோதும் சம்மதிக்கமாட்டார்கள். (இதுதான் ஆரிய மதத்தில் நியோகமென்பது) இவ்வித துர்க்கிர்த்தியங்கள் நிறைந்த ஹிந்து மதத்தை எங்கள் மூதாதைகள் எங்ஙனம் ஒப்புக்கொள்வார்கள்? மரியாதையான மறுவிவாகம் கூடாதென மறுத்து நியோகமென்னும் பகிரங்க விபசாரத்தை மேற்கொள்ளும் உமது வெட்கங்கெட்ட ஆரிய மதத்திற்கா எம்போன்ற பக்தி நிறைந்த முஸ்லிம்களை அழைக்கிறீரென யாம் சர்மாவைக் கடாவுகிறோம். பண்டிதர் லேக்ருமால் திரையை நீக்கப்பட்டு வெளியில் காட்டப்பட்டிருக்கும் இந் "நிர்வாண ரூபமு"ள்ள ஹிந்து மதத்தை ஒரு நிமிஷமேனும் ஒருவன் ஒப்புக்கொள்வானா? எல்லாவிதமான விபசாரமும், எல்லாவிதமான துர்க்கிருத்தியங்களும், எல்லாவிதமான கெட்ட கருமங்களின் நிர்வாணத்தைக் காட்டும் ஹிந்து மதத்தின் பக்கமா நம் முஸ்லிம்களை அழைக்கிறீர்கள்? இத்தகைய ஹிந்து சாஸ்திரங்களின் மீதும், இத்தகைய ஹிந்து அவதாரிகள் மீதும் உங்களுக்கு விசுவாசமுண்டோ? இந்தியாவிலுள்ள எல்லா முஸ்லிம்களையும் ஹிந்து மதத்திலிருந்து பலவந்தமாக முஸ்லிம்களாக்கப்பட்டதென்றும் மீண்டும் இவர்களை ஹிந்துக்களாக்க வேண்டுமென பறையறைவது மேற்கூறப்பட்ட வெட்கங்கெட்ட ஹிந்து தர்மத்திற்காகவோ?

பண்டிதர் லேக்ரும், தயானந்தர், சர்மா முதலியோர் ஹிந்து மதத்தைவிட்டுப் பிரிந்து ஹிந்து மதத்திற்கு விரோதமாக ஆச்சேபங்களைக் கிழப்பும்படி இவர்கள்மீது எந்த (இஸ்லாத்தின்) வாளாயுதத்தை உபயோகிக்கப்பட்டதென்று இவர்களிடம் யாம் வினவுகிறோம். தனது நாமத்துடன், (M. A.) என்ற வாலையும் சேர்த்துக்கொண்ட ஒருவர் ஹிந்து மதத்தின் மானங்கெட்ட போதனைகளை அறிந்தும், அறியாதவரைப் போலிருந்துகொண்டு எங்கள் மூதாதைகள் ஹிந்து மதத்தைத் துறந்தது முஸ்லிம்களின் வாளாயுதத்திற்குப் பயந்தும், பெண்ணாசை, மண்ணாசைக்காகவென்றும்கூறி விஷமப் பிரசாரம் செய்வது எத்தகைய

மானங்கெட்ட செய்கையாயிருக்கின்றது! எங்கள் முப்பிதாக்களின் பரிசுத்த நாமத்தின்மீது இத்தகைய அடாப் பழிமொழிகளைச் சுமத்துவது பேடித்தனமான தாக்குதலாயிருக்கும். இப்பொய்யின் பிரதிபலனைத் தாங்கள் மரித்தபின் மனு (12 : 9)ன் பிரமாணப்படி அதிக அசுத்தமான புழுவின்கூண்டில் போகும்படியாக நேர்ந்தால் உங்களுக்கு குறைகூற ஒருபோதும் சந்தர்ப்பங்கிடைக்காது.

## முக்திக்களஞ்சியம்.

மேற்கூறப்பட்ட "ஆரியாமுஸாபரின்" வார்த்தைகளைக் கொண்டு காட்டப்பட்ட ஹிந்து வேதத்தின் நிருவாண ரூபத்தின் திரையை எடுத்துவிட்டபின் எங்கள் மூதாதைகள் சிற்றின்பக்காரர்களென்றும், முஸ்லிம் ஸ்திரீகளைக்கொண்டு அவர்கள் மீது காதல்கொண்டே இஸ்லாத்தை ஒப்புக்கொண்டார்களென்றும், இஸ்லா மதத்தில் ஒருவித நல்ல குணத்தையும் அவர்கள் காணவில்லை யென்றும் கற்றுணர்ந்த மேதாவியாகிய நண்பர் சர்மா வென்பவர் கூறும் பழிமொழியைக் கவனிப்போம். சகோதரர் சர்மாவின் இவ்வாதாரமற்ற கூற்று பெரும் பொய்யாயிருப்பதால், எங்களுக்கு அதை மறுத்துக்கூற அவசியமில்லை எனினும், முஸ்லிம்கள், கடல்மார்க்கமாகவும், கரைமார்க்கமாகவும் இவ்விந்தியாவுக்கு வரும்போது, ஹிந்துக்களுக்கு லஞ்சமாகக் கொடுக்க எத்தனை முஸ்லிம் ஸ்திரிகளைக்கொண்டு வந்தார்களென்று சரித்திர ஆதாரத்தோடு எண்பிக்கும்படி சகோதரர் சர்மாவைக் கடாவுகிறோம்.

முஹம்மத்பின் காஸிம் (ரஹ்) சுல்தான் சப்தக்கீன் (ரஹ்), சுல்தான் காஸி மஹ்மூத்கஸ்னவி (ரஹ்), சுல்தான் ஷிஹாபுத்தீன் கவ்ரி (ரஹ்) முஹம்மத் மஸ்ஹருத்தீன் பர்பர் (ரஹ்), முதலியோர்கள் இந்தியாவுக்கு வரும்பொழுது அவர்களுடன் போர்வீரர்களைக் கொண்டுவந்தார்களென்று சரித்திரம் கூறுகிறதேயன்றி, அவர்களுடன் முஸ்லிம்பெண்டுகளை (ஹிந்துக்களுக்கு லஞ்சம் கொடுத்து இஸ்லாமதத்தில் சேர்ப்பதற்காக) கொண்டு வந்ததாக ஒரு சரித்திரமாவது கூறவில்லை. இந்த ஜன்மத்திலாவது, அல்லது மறுஜன்மத்திலாவது, அல்லது மனு: 19 : 9 ன் பிரமாணப்படி அசுத்தமான புழுவின் கூண்டுக்குள்ளாவது போய்

சர்மாவாவது அல்லது வர்மாவாவது எங்கள் முப்பிதாக்களுக்கு லஞ்சம் கொடுப்பதற்காக அன்னிய நாட்டிலிருந்து லக்ஷக்கணக்கான (முஸ்லிம்) ஸ்திரீகளை இறக்குமதி செய்தார்களென்று எண்பித்துக் காட்டுவாராயின் அன்னவருக்கு எமது மனமார்ந்த வந்தனத்தை சமர்ப்பிக்கத் தயாராயிருக்கிறோம். ஆயினும் உலகத்திலுள்ள ஒரு போலிசரித்திரத்திலாவது மேற்கூறப்பட்ட விஷயம் எண்பிக்க முடியாதென்று யாம் பகிரங்கமாய்க் கூறுவோம். சிற்றின்பமான காமஇச்சைகளைப் போக்கிக்கொள்ள பல்லாயிரக் கணக்கான அநுமதிகள் நிறைந்து கிடக்கும் ஹிந்து மதத்தை விட்டுவிட்டு (எமது மூதாதைகள்) பெண்ணாசையினால் இஸ்லாமதத்தை ஒப்புக்கொண்டார்களென்று நம் சகோதரர் சர்மா கூறுவது அன்னவரின் நீசக்குணமேயன்றி வேறல்ல. எமது மேற்காட்டிய வாதத்திற்கு ஆதாரமாக ஸ்வாமி தயானந்தரையே சாக்ஷிபகரும்படி யாம் வற்புறுத்துவோம், பக்தி நிறைந்த மதமென சர்மாவால், புகழப்படும் ஹிந்து மதம், எங்கள் பக்தி நிறைந்த மூதாதைகளால் ஒப்புக்கொள்ளக்கூடாத மானங்கெட்ட சீர்குலைந்த மதமென்று தயானந்த சரஸ்வதியின் வார்த்தையைக் கொண்டே யாம் நிருபிப்போம். சுவாமி தயானந்தர் ஹிந்து மதக் கிரந்தத்தில் வரையப்பட்டுள்ள போதனையைக் கீழ்க்கண்டவாறு எடுத்தோதுகிறார்:—

"சூதகஸ்திரீயுடன் விபசாரஞ்செய்வது புஷ்கர தீர்த்தத்தின் ஸ்னனத்திற்குச் சமானமென்றும்" "சண்டாளியுடன் விபசாரம் செய்வது காசி ஸ்நானத்திற்குச் சமானமென்றும்" "சக்கிலிச்சியுடன் புணர்வது பிரயாகை ஸ்னனத்திற்கு ஒப்பானதென்றும்" "வண்ணாத்திரிடன் கூடுவது மதுராபுரியை தெரிசிப்பதற்குச் சமானமென்றும்" "வேசியுடன் கூடுவதோ ராமச்சந்திரஜி மஹாராஜ்உடைய பிறப்புஸ்தலமாகிய அயோத்தியாவைத் தெரிசிப்பதற்குச் சமானமென்றும் கருதுகிறார்கள்" (சத்தியார்த்தப் பிரகாசம் தமிழ் அத்தியாயம்: 11 பக்கம் 10;) (சத்தியார்த்தப்பிரகாஷம் உர்து, குபுர்தோடு) தயானந்த சரஸ்வதி ஹிந்துமதத்தின் மற்றொரு பிரிவைப் பற்றி கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:-

"மதுபானம் மாமிசம், மீன் பணியாரம், விபசாரம் (மைதுனம்) என்னும் ம வில் ஆரம்பமாகும் இவ்வைந்தும் எப்பொழுதும் மோக்ஷத்தை

யளிக்கும்,'' சத்தியார்த்தப் பிரகாசம் அத். 11 பக்கம் 9.)*

''பைரவி சக்கரத்திலிருக்கும்போது ஆடவர்கள் சிவனுகவும் பெண்கள் பார்வதி என்றும் கருதி விபசாரஞ்செய்யலாம்,'' என்று கூறும் ஒருகூட்டத்தைப்பற்றி சுவாமி விவரித்துக்கூறுகிறுர். (சத்தியார்த்தபிரகாசம் அத்.11பக்கம் 9/10.) இதுமாத்திரமா? வாமமார்க்கிகள் பூமியின் பேரிலோ அல்லது ஒரு பலகையின் மேலோ ஒரு முக்கோணத்தையோ, அல்லது ஒரு சதுரத்தையோ, அல்லது ஒரு சக்கரத்தையோ, எழுதி அதின்மேல் ஒரு சாராய ஜாடியை வைத்துப் பூஜை செய்து, '' மதுபானமே! நீ பிர்மசாபத்திலிருந்து மீண்டவன்'' என்கிருர்கள்.

''வாம மார்க்கத்தவர்களைத் தவிர வேறு யாரும் வரக்கூடாத இடத்தில் ஆடவர்களும் பெண்களும் கூடி புருஷர்கள் ஸ்திரீகளை நிர்வாணமாகச் செய்து பூஜைசெய்கிருர்கள். ஸ்திரிகளும் புருஷர்களை நிர்வாணமாகச் செய்து பூஜை செய்கிருர்கள். பிறகு தன் மனைவி, பெண், தாய், சகோதரி, நாட்டுப்பெண் யாராயிருந்த போதிலும் புருஷர்கள் இவர்களுடன் சேரலாம்''.

''பிறகு பாத்திரமொன்றில் சாராயம் நிறைத்து ஒரு தட்டு நிறைய மாம்சம் பணியாரம் இவைகளை வைக்கிருர்கள், அப்பொழுது அவர்களுடைய ஆசான் அவைகளைக் கையிலேந்தி நான்தான் பைரவன் நான்தான் சிவன் என்று சொல்லி அதைக்குடிக்கிருர்கள்; மிருதியை மற்றவர்கள் குடிக்கிருர்கள். பிறகு எந்த ஸ்திரியையாவது, அல்லது வேசியையாவது, அல்லது புருஷனையாவது நிர்வாணமாகச் செய்து கையில் கத்தியைக்கொடுத்து தேவி யென்ருவது மகாதேவன் என்ருவது அழைத்து அவனுடையவோ, அல்லது அவளுடைய மர்மஸ்தானத்தையோ பூஜை செய்து அந்தத் தேவியை மதுபானமருந்தச்செய்து மீதியானவர்களும் அதிலிருந்தே குடிக்கிருர்கள், மயக்கம் வரும்வரை குடித்து சகோதரி, தாய் யாராயிருந்தபோதிலும் சரியே அவர்களுடன் புணரவேண்டியதே. மயக்கம் அதிகமாய்விட்டால் அவர்களுக்குள்ளேயே சண்டை செருப்படி, தலைக்குத்தலை யிழுத்தல் ஒருவரை யொருவர் அடித்தல் முதலானவைகள் ஏற்படுகின்றது.'' (ஷை அத். 10/11 பக்கங்கள்) இது மாத்திரமா? மீண்டும் சுவாமி கூறுகிறுர்:—

* பெண் மர்மஸ்தானத்தைப்போல் சொரூபம் வரைந்து அதில் வைத்து இவ்வஸ்துக்களைப் புசிக்கிருர்கள். (உர்து ச.பி., அ. 11 ப.366)

"தாயைத்தவிற மற்றவர்களுடன் சம்போகம் செய்யலாம்" ஷெ அத். ....... பக்கம் 9) தாயுடன்கூட சம்போகம் செய்யலாம் அன்னு ரையும் விடக்கூடாது (ச. பி. 12-வது பக்கம்) என்று கூறும் கூட்டங்களிருப்பதாகவும் வரைந்துள்ளார். இது மாத்திரமா? சோலி மார்க்கி, பீஜமார்க்கி, என்னும் கூட்டங்களைப் பற்றி சுவாமி பின் வருமாறு வரைந்துள்ளார்:-

சோலிமார்க்கிகள்:— தங்கள் மனைவிகள், புருஷர்கள், பிள்ளைகள் பெண்கள், சகோதரர்கள். தாய்மார்கள், நாட்டுப்பெண்கள்— ஒன்றாக ஓரிடத்தில் ரகசியமாகக்கூடி மதுபானஞ் செய்கின்றார்கள் ஸ்திரி ஒருத்தியை நிர்வாணமாகச் செய்து அவளுடைய ரகசிய இந்திரியங்களைப் பூஜித்து துர்க்காதேவி என்றும் அழைக்கிறார்கள், மனிதனொருவனை நிர்வாணமாகச் செய்து பெண்களெல்லோரும் அவனுடைய ரகசிய இந்திரியங்களைப் பூஜை செய்கிறார்கள், மதுபானஞ்செய்து மயக்கம் தெளிந்த பிறகு அங்கு குழுமியிருக்கும் ஸ்திரீகளெல்லோர்களின் ரவிக்கைகளை ஒன்றாகச் சேர்த்துக் குலுக்கி ஒரு மட்பாண்டத்தில் வைக்கிறார்கள் ஒவ்வொருவனும் தனித்தனியாக அங்குபோய் மட்பாண்டத்துக்குள்ளிருக்கும் ரவிக்கை யொன்றை எடுத்துக்கொள்வான். ரவிக்கைக்குரியவள்—தன்னுடைய தாய், சகோதரி, நாட்டுப்பெண் — யாராயினும் அந்தச் சமயம் அவனுடைய மனைவியாவாள், மயக்க வேகத்தினால் ஒருவருக்கொருவர் செருப்பு முதலானதுகளினால் அடித்துச் சண்டை செய்துகொள்வார்கள் இரவை இவ்விதம் கழித்துப் பொழுது புலராமலிருக்கும் பொழுதே வீடடைந்து தங்கள் தாய், சகோதரி, பெண்கள், நாட்டுப் பெண்கள் முதலானவர்களை சரியாக அறிந்து அப்படியே நடத்தியும் வருகிறார்கள்".

பீஜமார்க்கிகள்:— சம்போக சமயத்தில் ஜலத்தில் வீரியத்தைக் கலந்து குடிக்கிறார்கள். இத்தகைய ஈனக்காரியங்கள் முக்தியை யளிக்குமென்று நம்புகிறார்கள். சாதாரணமாக அவர்கள் அறிவு, விசாரணை, சவகாசம் இல்லாதவர்கள்". (.........அத். 11. பக்கம் 88/9)

தயானந்த சரஸ்வதி மேலும் எழுதுகிறார்:-

"கோசேனர்கள் தங்களுடைய சம்பிரதாயக்காரர்களை புஷ்டிமார்க்கத்தவர்க" ளென்கிறார்கள். உண்ணுவது. உறங்குவது, களித்திருப்பது, மதுபானஞ்செய்வது, ஸ்திரீகளுடன் கூடி இஷ்டப்பிரகாரம் போக விலாசஞ் செய்வதில் காலங்கழிக்கிறார்கள்" (அத் 11 பக்.108)

கோசேனர்களின் சீடர்கள்யாதொன்றையும் கோசேனர்க்கு அளித்து சமர்ப்பணஞ்செய்யாமல் அனுப்பிவிக்கக்கூடாது. இக்

காரணத்தைக்கொண்டே சீடர்கள், தங்கள் மனைவி மக்கள் நாட்டுப்பெண் பொருள் முதலியவைகளை குருவுக்குச் சமர்ப்பணஞ் செய்கிறார்கள்......தன்னுடைய சொந்தமனைவியைக் கோசேனர்கள் குருவினுடைய சரணங்களில் சமர்பிக்காமல் தொடவுங்கூடாது, என்பதே அவர்களுடைய விதி. எனெனில் எல்லாக் காரியங்களையும் பொருள்களையும் முதன் முதலாகக் கோசேனருக்களிக்கவேண்டும். கோசேனருக்கு முதலில் மனைவியை சமர்ப்பணஞ் செய்தபிறகே தான் புணரவேண்டும்.'' (...... அத். 11 பக்கம் 107)

''யாராவது சீடர்கள் அழைத்தால் கோசேனர் அங்குபோய் கீழே உட்கார்ந்து வாய் திரவாமல் மரப்பொம்மையைப் போலிருப்பான்,...... இமைகொட்டாமல் மாதர்களை விழித்துப் பார்த்துக்கொண்டே யிருப்பார். அவனால் பார்க்கப்பட்ட ஸ்திரீ தன்னை அதிக அதிர்ஷ்டமுள்ளவளாக நினைத்துக்கொள்கிறாள். அவளுடைய தாய், தகப்பன், புருஷன், சகோதரன் முதலானோர்களும் சந்தோஷமடைகிறார்கள். நமஸ்காரம் செய்யும்பொழுது ஸ்திரீகளெல்லோரும் அவனுடைய பாதங்களைத் தொடுகிறார்கள். அவனுக்குஇஷ்டப்பட்ட மாதர்களின் கைவிரலை காலால் கொஞ்சம் பலமாக அழுத்துகிறான், அல்லது கண்பார்வையைச் செலுத்துகிறான். அந்த ஸ்திரியின் புருஷன் முதலான பந்துக்கள் மிகவும் பாக்கியமுள்ளவர்களாக நினைத்துக்கொள்கிறார்கள். அவளுடைய புருஷனும் உறவினர் முதலானவர்களும் ''கோசேனருடைய சேவையிலிரு'' என்கிறார்கள். (ச. பி. அத். 11 ப. 110) **பீச்சாங்குழல் நிறைய சாய நீரை இழுத்து** ஹோளிப் பண்டிகைக் **கொண்டாட்டத்தில் மாதர்களுடைய மர்மஸ்தானத்திலும், ரகசிய பாகங்களிலும் அதைப் பீச்சுகிறார்கள்.** (ச. பி. அத். 11 பக்கம் 111) ''மேலும் ஷாகத் மதஸ்தர்கள் **ஆயிரம் யோனிகளைத் தரிசனஞ்செய்தால் முக்தியுண்டாகும், இதைவிட ஈடேற்றத்திற்கு வேறு வழியில்லை''**, ஆயிரம் ஸ்திரிகளுடன் துர்நடத்தை செய்வதே முக்தியின் வழியாகும், என்று சுவாமிஜீ அறிவிக்கிறார். மேலும் **''சிவனை அதாவது லிங்கத்தை காலையில் தரிசனஞ் செய்கிறதினால் இரவில் செய்யப்பட்ட பாவம் நீங்கிவிடும், மத்தியானத்தில் தரிசனஞ் செய்தால் வாழ்நாள் முழுவதும் செய்த பாவமும், சாயங்காலம் தரிசனஞ் செய்தால் ஏழு பிறப்பி**

லுள்ள பாவங்களும் மன்னிக்கப்பட்டுவிடும்." (உர்து, சத்தியார்த்தப் பிரகாசம் பக்கம் 367)

இவ்விஷயங்களை யாம் நீட்டிக்கொண்டுபோக விரும்பவில்லை தனது தாய் சகோதரி மகள் முதலனவர்களுடன் விபசாரஞ்செய்யும் (ஆரிய) கூட்டங்களைப்பற்றியும் ஆயிரம் ஸ்திரிகளுடன் விபசாரஞ்செய்தால் மாத்திரமே ஈடேற்றம் கிடைக்குமென்ற(ஆரிய) கூட்டங்களும், லிங்கத்தைத் தரிசனம் செய்தால் எல்லாப் பாவங்களையும் மன்னிக்கப்படுமென்ற (ஆரிய) கூட்டங்களைப் பற்றியும் சுவாமி தயானந்தர் வரைந்துள்ளவைகளையே யாம் மேலே எடுத்துக்காட்டியுள்ளோம். இவ்வாறு யாம் எடுத்துக் காட்டவேண்டிய காரணந்தானென்ன? ஹிந்து மதத்தின் நிர்வாண பாகத்தின் திரையை உயர்த்த (முஸ்லிம்களுக்கு) என்ன அவசியமென்று எவரேனும் எம்மிடம் வினவுவாராயின், ஆம் ஹிந்து மதத்தின் நிர்வாண பாகத்தை ஏனையோருக்கு எடுத்துக் காட்டும் அவசியம் இப்பொழுது ஏமக்கேற்பட்டிருக்கிறதென்றே விடையிறுப்போம்

ஏனெனில், விபசாரஞ் செய்தால் மாத்திரமே முக்தியுண்டெனப் போதிக்கும் (மானங்கெட்ட) ஆரிய மதத்தைத்துறந்து பக்திநிறைந்த எமது மூதாதைகள் இஸ்லாமதத்தைத் தழுவியது பெண்ணாசையினாலென்று நம் சகோதரர் சர்மா கூறியது எத்துணை மதியீனமென்பதைக் காட்டவே யாம் ஹிந்து மதத்தின் நிர்வாணத் திரையை நீக்கிவிட்டோம். பக்திநிறைந்த எமது மூதாதைகள் சிற்றின்பக் காரர்களாயிருந் திருப்பார்களாயின் அவர்கள் நாடியபடி தமது இச்சைகளைப் போக்கிக்கொள்ள ஹிந்து மதத்தில் பல இலகுவான பிரிவுகளிருக்கின்றன, ஏனை ஸ்திரீகளை ஏறெடுத்துப் பார்க்கக்கூடாதென்றும், விவாகம் செய்தவன் விபசாரஞ் செய்வானாயின் அவனைக்கல்லாலடித்துக் கொல்லவேண்டுமென்றும், விவாகம் செய்யாதவன் விபசாரஞ் செய்வானாயின் எல்லா மனிதர்கள் முன்பாகவும் அவனது நிர்வாண முதுகில் 100 சவுக்கடி கொடுக்கவேண்டுமென்று போதிக்கும் எமது மாசற்ற தீனுல் இஸ்லாமென்னும் இவ்வற்புத வாரிதியை பக்திநிறைந்த எமது மூதாதைகள் முழுமனதுடன் ஒப்புக்கொள்ளக் காரணந்தானென்ன? ஹிந்து மதம் அஞ்ஞானம் நிறைந்த மதமென்பதே இதற்குக் காரணம், பக்திமான்களான எமது மூதா

தைகள் ஹிந்து மதத்திலுள்ள மானங்கெட்ட நிர்வாண போதனையை வெறுத்துத் தள்ளி இருலோகத்திலும் அழிவைவிட்டுத் தப்பித்துக்கொள்ளுவான் வேண்டியும், மறுமையில் இனியில்லா ஈடேற்றமும் முடிவில்லா முக்தியும் அடைவான் வேண்டியுமே சத்திய சன்மார்க்கமாகிய இஸ்லா மதத்தை ஒப்புக்கொண்டார்கள். கடைசியாக நம் ஹிந்து ஆரிய சகோதரர்கள், தமது மதத்திலுள்ள மானங்கெட்ட நிர்வாண பாகத்தை வாசித்த பின்னும் எமது மூதாதைகள் பெண்ணாசையினால் இஸ்லாமதத்தை ஒப்புக்கொண்டார்களென்று சொல்ல வெட்கப் படுவார்களென்று நம்பி இதை இத்துடன் முடிக்கிறேன்.

## நெய்.

எங்கள் மூதாதைகள் வாளாயுதத்திற்குப் பயந்தும் பேராசையினாலும் இஸ்லாம் மார்க்கத்தை ஒப்புக்கொண்டதாக எங்கள் மூதாதைகளின்மீது, ஆரியர்களால் பழி சுமத்தப்பட்டு வருகின்றது. எங்கள் முன்னோர்களின் தீர்மானங்கள்மீது, மீண்டும் கவனத்தைச் செலுத்தி பார்க்க எங்களிடம் கேட்கப்படுகின்றது இதற்காகவேண்டி ஹிந்து வேதங்களின் பழைய புதிய வியாக்கியானிகளுடைய நடனசாலையையும் எங்கள் முன்பாக வைக்கப்பட்டிருக்கின்றது. இவைகளை யாம் பார்த்து எங்களுக்கே திருப்தி கிடைக்காமலிருக்க, அறிவாளர்களும், பக்திவான்களுமாகிய எங்களின் மூதாதைகளுக்கு எவ்வாறு திருப்தி கொடுத்திருக்கக்கூடும்? இவ்வித அதிருப்தி கொடுக்கக்கூடிய வேதபோதனைகளை வெறுத்து எங்கள் முன்னோர்கள் நேரானபாதையாகிய சுத்தசத்திய இஸ்லாமென்னும் முக்திமார்க்கத்தை பின்துயர்ந்து கொண்டார்கள். நாமிதுவரை "காய்ந்த" விஷயங்களைபற்றி ஆராய்ச்சி செய்துவந்து களைத்துவிட்டோம். சற்று நாமிப்போது "நெய்யைப்பற்றி ஆராய்வோம்", நெய் விஷயத்தைப்பற்றி சுவாமி தயானந்தரால் கூறப்பட்டவைகள்மீது நாம் நடப்போமாயின் இந்துஸ்தானத்திலுள்ளவர்களின் கிறகஸ்த முறையில் (economies) எவ்வளவு கஷ்டங்கள் விளையுமென்பதை யாம் நோக்கவேண்டியது.

பனாரஸில் 1875-ல் அச்சிடப்பட்ட "சத்தியார்த்தப் பிரகாச"த்தின் 153-வது பக்கத்தில் "நடுஜாமத்தில் சரீர முழுதும் நெய்யால் முழுகி மாதவிடாயை விட்டு தப்பாவான விதவை ஸ்திரிகளுடன் மௌனமாக நியோகஞ்செய்து ஒரு ஆண்குழந்தையை பெற்றெடுக்கவேண்டும்" என்று சுவாமி தயானந்தர் வரைந்துள்ளார். மேலும் நியோகஞ் செய்யக்கூடிய 11 வகையானவர்களைப் பற்றி சுவாமியார் விவரித்துமுள்ளார். அதாவது:- கெட்ட நாவுடைய ஆண் பெண், பெண்பிள்ளையாகவே பெறும் ஸ்திரி, அல்லது புருஷன், நெடுநாளாக அசௌக்கியமாயிருக்கும் புருஷர்களின் மனைவிகள், அல்லது அவ்வாறான ஸ்திரீகளின் புருஷர்கள் அயல் தேசம் சென்றுள்ள புருஷர்களின் மனைவிகள் முதலியவர்களாகும் 23 கோடி ஹிந்துக்கள் வசிக்கும் இப்பாரத நாட்டில் நியோகஞ் செய்ய அவசியப்பட்ட ஆண் பெண்களின் தொகை மூன்று கோடியாக மட்டும் யாம் திட்டப்படுத்தி, சுவாமி தயானந்தரின் ஏவல்படி மாத மொருமுறை நியோகஞ் செய்வார்களாயின் குறைந்த கணக்கில் ஏக்பாவ்புக்தா நெய் ஒவ்வொருவருக்கு சிலவாகும். இக்கணக்குப்படி வருஷமொன்றிற்கு நியோகத்திற்கு மட்டும் மேனியில் தேய்க்கிறதற்காக $22\frac{1}{2}$ லக்ஷம் மன்* நெய் செலவாகும் எனினும் சன்ஸ்கார்பதீயில் சம்யோகத்துக்கு முன் ஹோமம் செய்யவும் சாமியார்ஏவியுள்ளார். இந்தஹோமத்திற்காக சுவாமியாரின் கணக்குப்படி 4 ஆஹோதியில் குறைந்த கணக்கில் 6 மாஷா நெய் ஒவ்வொருவருக்கு அவசியமாகும். 3 கோடி ஆண் பெண்கள் ஒரு வருடத்தில் 12 முறை நியோகஞ் செய்வதற்கு மேனியில் பூசிக்கொள்வது போக ஹோமத்திற்கு 4162500 "மன் லட்சம்" நெய் அவசியமாகிறது. நியோகத்திற்காக 225 லட்சம் "மன்" நெய் அவசியமாகிறது. ஒவ்வொரு தினமும் காலை மாலை ஆரியர்களுக்கு அக்கினிஹோத்திரம் செய்யும்படியாக தயானந்த சுவாமியார் கூறுகிறார். காலையிலும், மாலையிலும் யார் செய்யவில்லையோ அவர்களை புத்திவான்கள் பிராமணர்களுடைய வரணத்திலிருந்தொதுக்கிச் சூத்திரனைப்போல் நடத்தவேண்டும் (ச.பி. 127 ¶ வது பக்கம்). காலை மாலை செய்யும் ஹோமம் அல்லது அக்கினி ஹோத்திரத்திற்காக எவ்வளவு நெய் எரிக்கவேண்டு மென்று

* ஒரு மன் 40 கொத்தாகும்.—

¶ தமிழ் ச. பி. 4-வது அத். 111-வது பக்கம்—அப்துல்கப்பார்.

பார்க்கவேண்டியது. தினந்தோறும் இரு நேரங்களிலும் செய்ய வேண்டிய ஹோமத்திற்கு, ஒவ்வொருவர் 60 ஆஹோதி நெய் எரிக்கவேண்டுமென்று சன்ஸ்கார்பதீயில் சுவாமி தயானந்தர் விவரித்துள்ளார். இக்கணக்கின்படி தற்போதுள்ள 23 கோடி ஹிந்துக்களில், சன்னியாசிகளையும் பிள்ளைகளையும் நீக்கிவிடுவோமாயின் 20 கோடி ஹிந்துக்கள் தினந்தோறும் இருநேரங்களிலும் ஹோமஞ் செய்யவேண்டியவர்களா யிருக்கிறார்கள். இவர்களுக்கு தினந்தோறும் $6\frac{1}{2}$ கோடி மன் நெய் எரிக்கவேண்டியதாகும்! மேலும் 16 சன்ஸ்காரம் ஆரியர்கள் செய்யவேண்டு மென்றும் சுவாமியார் கூறியுள்ளார் 20 கோடி ஹிந்துக்களில் ஒவ்வொருவரும் ஒரு வருஷத்திற்கு ஒருமுறை சன்ஸ்காரஞ் செய்வதில் ஒவ்வொரு சன்ஸ்காரத்தில் 8 கொத்து நெய் செலவளிப்பார்களாயின் ஒரு வருஷத்திற்கு 160 கோடி கொத்து நெய் செலவாகும். சம்யோகத்திற்காக போகும்போதும் ஹோமஞ் செய்யும்படியாக சுவாமியார் கூறியுள்ளார். இவைகளை எல்லாம் யாம் கணக்கிடும்போது தினந்தோறும் பல கோடி கொத்து நெய் எரிக்கவேண்டியதாயிருக்கிறது. இரகசியத்திலாவது ஹிந்து ஆரியர்கள் தினந்தோறும் எராளமான கொத்து நெய்யை எரித்து வருகிறார்கள் போலும். இதன் காரணமாக நெய் அதிகமாக கிட்டாமல் நெய்யின் கிரையம் அதிகமாக கூடிவிட்டது. எனினும் முஸ்லிம்கள் பசுவதை செய்கிறதால் பால் நெய் குறைந்துவிட்டதென்று ஆரியர் குருட்டு ஞானம் பேசிவருகிறார்கள். எங்கள் மூதாதைகள் வாளாயுதத்திற்கு பயந்தும் பெண்ணாசை முதலிய போரவாவினாலும் இஸ்லாமதத்தைத் தழுவியதாக ஆரியர்கள் பழிசுமத்துகிறார்கள். நாளொன்றுக் கரைவயிறு கூளாகிலும் கிடைக்காத ஜனங்கள் எவ்வளவோயிருக்கிறார்கள். தினந்தோறும் இருவேளை ஹோமம் செய்வதற்கும், சம்யோகம் முதலான சமயங்களில் சரீரத்தில் பூசிக்கொள்வதற்கும் எங்கிருந்து நெய் அவர்களுக்கு கிடைக்கப்போகின்றது? இவ்வித போலி நிபந்தனைகளையும், பரிகாசத்திற்குள்ளாக்கும் போதனைகளையும்,வெறுக்கத்தக்க வேதத்தையும் எங்கள் மூதாதைகள் துறந்து சித்தம் வெத்தியடையும், நித்தம் முக்தியுடையவுமான, சக்தியுடைய இஸ்லாமென்னும் சன்மார்க்கத்தின் உயர்ந்த போதனைகளைக் கண்டு இஸ்லாத்தை ஒப்புக்கொண்டார்கள்.

## உண்மையின் அடையாளம்.

எங்கள் முன்னோர்கள் ஹிந்துவேதத்தை ஏன் துறந்தார்கள்? என்ற வினாவுக்கு சொற்பமானவிடை யாம் முன் கொடுத்து விட்டோம். ஹிந்து வேதங்களுக்கு ஊழியம் புரிவதில் தமது வாழ்நாளைக் கழித்த சுவாமி தயானந்தருக்கு ஹிந்து வேதங்கள் மீது நம்பிக்கை யிருந்ததா? அல்லது முஸ்லிம்கள், கிரிஸ்தவர்களுடன் வாதம் புரிகிறதற்காக, (வேதாகமங்கள் மீது நம்பிக்கை அற்றவராயிருந்தும்) வேதங்களைக்கொண்டு உதவி தேடினரோ? வென்பதைப் பற்றி ஆராய்வோம். மேலும் விரோதிகளுக்கு தோல்வி கொடுக்கிறதற்காக கபடம் வஞ்சகம் முதலியவைகளை செய்யவும் சுவாமியாரிடம் ஆகுமான விஷமாயிருக்கிறது. (உர்து ச. பி. 309 ப.) ஆகையால் முஸ்லிம்களுடனும் கிறிஸ்தவர்களுடனும் வாதம் புரிகிறதற்காக (ஹிந்து வேதங்கள்மீது தமக்கு நம்பிக்கை யில்லாதிருந்தும்) ஹிந்து வேதங்களைக்கொண்டு குபாடமாக உதவி எடுத்திருக்கவும் போதும். ஏனென்றால் என்ன அத்தாட்சியின்மீது திருக்குர்ஆனை தெய்வநூலல்லவென்று ஆட்சேபித்தாரோ சுவாமியார், அதே அத்தாக்ஷியைக்கொண்டு சுவாமியாரின் வேதங்களும் தெய்வநூலல்ல வென்பதாக ரூபிக்கப்படுகின்றது.

சுவாமியாரின் சத்தியார்த்தப்பிரகாசம் உர்து பிரதியின் 585-வது பக்கத்தில் "எவன் உனது மதத்தை ஒப்புக்கொள்ள வில்லையோ அவனை கொலைசெய்து விடென்று எந்தநூல் கூறுகின்றதோ அந்த மதத்தின் கடவுளை நம்புவதில் நஷ்டமேதவிர பிரயோஜனமில்லை" என்று கூறியுள்ளார். சுவாமியார் கொடுக்கப்பட்ட உரைகல்லை கொண்டு சுவாமியாரின் வேதங்களுண்மையானதா வென்று பார்ப்போம்:- 1. "வேத விரோதிகளை உயிருடன் நெருப்பில் எரித்துவிடுங்கள். மேலும் எவன் எங்கள் விரோதிகளுக்கு தைரியத்தைக் கொடுக்கிறனோ அவனை கால்மேல் தலைகீழாக தூக்கி காய்ந்த விரகைபோல் எரித்துவிடுங்கள்" என்று யஜுர் வேதம் 3: 12 கூறுகின்றது. ஹிந்துவேதத்தின் விரோதிகளை உயிருடன்நெருப்பில் எரித்துப்போடும்படி ஆரியவேதம் கூறுகிறபடியால் சுவாமியாருடைய உரைகல்லின் சட்டப்படி ஆரியர்களின் வேதநூல்களை ஊத்தக் குப்பையில் போடவேண்டியதாகும். சுவாமியாரின்

சொல்படி, இவ்விதமான (ஆரிய) வேதநூல்கள் மீதும், அவைகளின் கடவுள்மீதும் நம்பிக்கை வைப்பது ஆத்மாவிற்கு நஷ்டமும் ஆயுளுக்கு கஷ்டமும் உண்டாகுமேயன்றி ஒருவித பிரயோஜனமுமளிக்கமாட்டாது.

2. "கொள்ளை அடிக்கவும், வழிமறித்து திருடவும் (ஆனகாரியத்தை) மதிக்கப்பட்டு, இப்போதனை கடவுளுடைய போதனை என்று கூறுவது பெரும் வெட்கங்கெட்ட விஷயமாயிருக்கும். இப்படியான துற்போதனை யளிக்கும் மதத்தைவிட்டு நீங்கவேண்டியது". (ச. பி. 591-வது) பக்கம்

3. "எவ்விதம் மற்றோர்கள் உங்களுடன் விரோதம் பாராட்டினால் உங்களுக்கு கெட்டதாகத் தோற்றுமோ? அவ்விதமாக மற்றோர்கள்மீது உங்களுடைய கோபங்காட்டுவதாவது அவர்களுக்கு கெடுதியாகதோற்றும். எனவே விரோதத்திற்காக மற்றோர்களை கொலைசெய்வதும், தாங்கள் மற்றோர்கள்மீது விரோதம் பாராட்டுவதில் நின்றும் தங்களை விலக்கிக் கொள்ளாமலிருப்பது மௌல்விகளுடைய வேலையாயிருக்கும் இதோ சுயநலமும் பாரபச்சமுமானதாயிருக்கின்றது". (ச. பி. 613 ப.)

4. "எவ்வாறு நீங்கள் மற்றோர்களை துஷ்டர்களென்றும், காபிர்களென்றும் கூறுகின்றீர்களோ, அவ்வாறே மற்றோர்களும் உங்களை துஷ்டர்களென்றும் காபிர்களென்றும் கூறுகிறார்கள். இதற்காகவேண்டி அவர்களை கொலை செய்யவும் உங்களை விட்டுவிடவும் எவ்வாறு ஆகுமாகும்? இவ்வித போதனைக்குறிய நூல் ஆண்டவனால் கொடுக்கப்பட்டதாக ஆகாது" (ஷை புத்தகம்)

5. "எவர் குற்றமற்றவர்களை கொலை செய்கிறார்களோ, மேலும் மற்றோர்களுடன் விரோதம் பாராட்டுகிறார்களோ, அவர்கள் பெருங் கெட்டவர்களாகும். இவ்விதமான போதனைகளுக்குள்ளாகிறவர் தங்கள் அறிவீனர்களால் செய்யப்பட்டவைகளாகும்"(ஷை புஸ்தகம்). இவ்விதமாக அனந்தம் விஷயங்களைக் காட்டி திருகுர்ஆன் ஆண்டவனால் அருளப்படாததென்றும், ஆண்டவனால் அருளப்பட்டதாயின் இவ்விதமான போதனை குர்ஆனிலிராதென்றும் சுவாமி தயானந்தர் கூறியுள்ளார். ஆனால் இவ்வித போதனைகளே திருகுர்ஆனிலில்லை. எனினும் இவ்வித போதனைகள் சுவாமியாரின் வேத நூல்களில் மலிந்து கிடக்

கின்றன. அவைகளில் சிலவற்றை இங்கு எடுத்துக் காண்பிப்போம்:- 1. "ஓ வல்லமையுடைய மனிதனே! விரோதிகள் தின்றும், உண்டும், அல்லது மற்று வேலை வெட்டிகள் செய்யும் இடங்கள் முழுவதையும் அழித்து அவர்களை தங்களின் முழுவல்லமையால் சங்காரஞ்செய்யவும்" (யஜுர் 13: 14). 2. "நாம் விரோதங் காட்டுகிறவர்களையும், எங்களுடன் விரோதம் காட்டுகிறவனையும் புலி முதலியவைகளின் வாயில் போடவும்" (யஜுர் 15 : 15). 3. "எந்த துஷ்டனுடன் நாம் விரோதங் காட்டுகிறோமோ, அல்லது எந்ததுஷ்டன் எங்களுடன் விரோதங்காட்டுகிறானோ அவனை நாங்கள் (விஷ) காற்றுகளால் அழித்துப்போடுவோம்" (யஜுர்- 15 : 16). இவ்விதமாக அனந்தம் துற்போதனைகள் ஆரியர்களின் வேதநூல்களில் மலிந்துகிடக்கின்றன. சுவாமியார் இவ்விதமான போதனை (அவர் கனவுகண்ட விதம்) எங்கள் தெய்வத்திருமறையிலிருப்பதாகவும், அவ்வாறிருக்கிறபடியால் குர்ஆன் கடவுளின் அருள்மொழி யல்லவென்று முன்கூறியுள்ளதை யாம் எடுத்துக் காட்டியுள்ளோம், சுவாமியாரின் வேதநூல்களிலிருந்தும் இவ்வித துற்போதனைகளை மேலே காட்டியுள்ளோம். ஒரு நூலை தெய்வ வாக்கல்லவென்று ரூபிக்க சுவாமியாரால் திட்டப்படுத்தப்பட்ட ஆதாரங்களைக் கொண்டு சுவாமியாரின் வேத நூல்கள் தெய்வ வாக்கல்லவென்றும் அவைகளை குப்பைக் குழியில் போட வேண்டுமென்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

## யோனிச் சக்கரம்.

எங்கள் மூதாதைகள் பெண், பொன், மண்ணுக்கு ஆசை வைத்தும், வாளாயுதத்திற்குப் பயந்தும் இஸ்லாம் மார்க்கத்தை தழுவியதாக, அவர்களின்மீது சுமத்தப்பட்ட பழிகளுக்கு ஒருவாறு யாம் முந்தின அத்தியாயங்களில் மறுத்து உண்மையான காரணங்களை கூறியுள்ளோம். தற்போது ஹிந்து, ஆரியர்களின் **யோனிச் சக்கரத்தைப்** பற்றி சற்று ஆராய்வோம்.

"எங்கெங்கு ஆத்துமா, தான்செய்த கிரிகைகளுக்காக எங்கெங்கு யோனிகளில் இப்பூலோகத்தில் பிறக்கின்றதோ அவைகளின் விபரத்தை கேட்பாயாக" என்று **மனுமகராஜர்** கூறுகிறார் (மனு 12 : 53) இதற்குப்பின் பற்பல யோனிகளின் விஷ

யத்தை விவரித்துமுள்ளார். ஒருவன் தன் சரீரத்தால் திருடுவதும், பிறர் மனைவியுடன் விபசாரம் முதலிய கெட்ட கருமங்கள் செய்வதால் அவன் மரம் முதலான நடக்கஇயலாத யோனிகளில் செல்கின்றான்; நாவால் செய்யப்பட்ட பாவங்களுக்கு காட்டில் வசிக்கும் துஷ்ட மிருகங்கள், பறவைகளின் யோனியில் செல்வானென்றும்; இருதயத்தைக்கொண்டு செய்யப்பட்ட பாவங்களுக்காக சண்டாளர் முதலிய பாவிகளின் சரீரத்தில் போவார்களென்பதாக சுவாமி தயானந்தர் "சத்தியார்த்தப் பிரகாசம்" 289-வது பக்கத்தில் எழுதியுள்ளார். சுருங்கச்சொல்லில் ஹிந்து ஆரியவேத நூல்களைக்கொண்டு தெரியவருகிற தென்னவெனின், நன்மை தீமைகளுக்குப் பிரதிபலன் பெற்றுக்கொள்வதற்கு மனித ஆத்துமாவானது, மரங்கள், மிருகங்கள், ஸ்திரீகள், முதலியவற்றின் யோனிகளில் சுற்றிக்கொண்டு திரியவேண்டுமென்பதேயாம். ஆரிய வேதத்தின் இந்த யோனிச் சக்கரத்திற்கு "புனர்ஜென்மம்" "மறு பிறப்பு" என்ற நாமங்களுமுண்டு. இந்த யோனிச் சக்கரத்தைப்பற்றி சுவாமி தயானந்தர் அவரின் பல நூல்களிலும் விவரித்துள்ளார். சுருங்கச் சொல்லின் ஹிந்து ஆரியர்களின் வேதப்பிரமாணப்படி ஒருவனுக்கு முக்தி, அல்லது ஈடேற்றங் கிடைக்க இந்த "யோனிச் சக்கரத்தை" சுற்றிச்சுற்றி திரியவேண்டுமென்பதே. இந்த பயங்கரமான சக்கரத்தைவிட்டும் தப்பித்துக்கொள்வதற்கு ஹிந்து ஆரிய வேதங்களில் பல வழிகளுண்டு. இவ்வழிகளில் ஒன்று வாமமஹரிஷிகள் எடுத்துள்ளார்கள். * இன்னொரு கூட்டம் "ஆயிரம் யோனிகளை தரிசனம் செய்தால் முக்தி கிடைக்கும்" என்ற "புகழு" க்குரிய வழியை பின்துயர்ந்து நடந்தார்கள் மற்றோர்கள் "தனது தாயையுங்கூட விடக்கூடாது, அவர்களுடைய யோனிக்கும் சேவை செய்ய வேண்டு மென்ற வழியை வெகு ஆவலுடன் பின் துயர்ந்து நடந்தார்கள். ஐயோ! இந்த யோனி சக்கரத்தில் சிக்குண்டவர்களுக்கு இதைவிட்டு பிரிந்துக்கொள்ள ஒரு மார்க்கமு மில்லை, மனு கூறுகிறார். "குருவின் மனைவியுடன் விபசாரஞ் செய்கிறவர்கள் புற்பூண்டுகளாகவும், மரங்களாகவும், பூக்களின் கொடி முதலியவைகளின் யோனியில் 100 விடுத்தம் போவார்கள். (மனு 12:57)

---

* இவர்களின் விவரத்தை "முக்திகளஞ்சியம்" என்ற அத்தியாயத்தில் பார்க்க.— அப்துல்கப்பார்.

இது சரியான போதனையாயின் புற்பூண்டுகள், நவதானியங்கள் மரங்கள் முதலியவைகளெல்லாம் வியபசாரத்தின் காரணத்தினுல் எங்களுக்கு கிடைத்த தென்று யாம் ஒப்புக்கொள்ள வேண்டியதாகும். குருவின் மனைவியுடன் எங்களுக்கு முன்னுள்ளோர்கள் வியபசாரஞ் செய்ததின் பொருட்டே நாம் சாப்பிடுகிறதற்கு காய் கறிகளும், நாம் வசித்திருக்க வேண்டிய வீடுகளுக்கு விறகுகளும் கிட்டுகின்றன. அவர்கள் குருவின் மனைவியுடன் வியபசாரஞ் செய்யாமலிருந்திருப் பார்களாயின் யாம் அணைந்திருக்கும் (கௌபீனம்) கொடுக்குத் துண்டாவது எங்களுக்கு கிடைக்கமாட்டாது. அவர்கள் குருவின் மனைவியுடன் வியபசாரஞ் செய்யாவிட்டால் பருத்திச்செடி எவ்வாறுண்டாகும்? ஆரிய ஹிந்து வேதசாஸ்திரப்படி ஆத்துமாவும், பிரகிருதியும், கடவுளால் சிருஷ்டிக்கப் பட்டவைகளல்ல, குருவின் மனைவியுடன் வியபசாரஞ் செய்த ஆத்துமாக்கள் இல்லாவிடின் பரமேசுவரரால் யாம் உண்ணுவதற்காக நவதானியங்களையும், நாம் வசிக்கிறதற்குறிய வீட்டுக்கு மரங்களையும், வஸ்திரங்களை உண்டுபண்ண பஞ்சு முதலிப மரங்களையும் சிருஷ்டிக்க முடியா. எங்களுக்குத் தினசரி தேவையான இவ்வஸ்துக்கள் இல்லாமல் பஞ்சம் வந்துவிடுமாயின், "ஓ ஈஸ்வரரே! நவதானியங்களையும், புற்பூண்டுகளையும், மரம் மட்டைகளையும் தந்தருள்வாயாக" என்று பரமாத்துமாவை யாம் பிரார்த்தனை புரிவோமாயின் "குருவின் மனைவியுடன் வியபிசாரஞ்செய்த ஆத்துமாக்கள் என்னிடமில்லை; புது ஆத்துமாக்களை சிருஷ்டிக்க யான் சக்தியற்றவன்; குருவின் மனைவியுடன் வியபிசாரஞ் செய்யுங்கள் அவ்வித வியபிசாரஞ் செய்த ஆத்துமாக்கள் என்னிடம் வருமாயின், உங்களுக்குத்தேவையான வஸ்துக்களை உண்டாக்கமுடியும்" என்று பரமாத்துமா விடை பகருவார். எனவே, ஆரிய மதத்தின் அஸ்திவாரம் வியபிசாரத்தின்மீதே கட்டப்பட்டிருக்கின்ற தென்பதற்கு இதைவிட வேறு ஆதாரமும் வேண்டுமோ?

மநு மகாராஜா மற்ருேரிடத்தில் கூறுகிருர்:- பிராமணனை கொலை செய்பவர்கள் இறந்தபின், நாய், பன்றி, கழுதை, செம்மறியாடு, ஒட்டகை, பசு, காளைமாடு, ஆடு முதலியவைகளின் யோனியில் போவார்கள்: (மனு 12 : 35)

பிராமணனை கொலைசெய்தவன் பசுவாகப் பிறப்பானென்று ஆரியவேதம் கூறுகின்றது. பிராமணனை கொலைசெய்த பாதகச் செயலினால் மரித்த பிறகு பசுவாய் பிறந்த துஷ்டர்களை ஹிந்துக்களால் வணங்கப்பட்டு வருகின்றது! இதுவே விந்தையிலும் விந்தை!! முஸ்லிம்கள் பசுவதை செய்வதால் பசு, குறைவாகிக் கொண்டு போகிறதாக முஸ்லிம்களை ஹிந்து ஆரியர்கள் குறை கூறுகிறார்கள். பசுமாடுகளின் குறைவு முஸ்லிம்கள் பசுவதை செய்வதாலன்று. (ஆரியவேதப்படி) பிராமணனை கொலைபுரியும் துஷ்டர்களின் குறைவே இதற்கு காரணம். பிராமணனை கொலை செய்த ஆத்துமாக் களில்லாமலிருக்கும்போது பரமேசுவரரால் எங்ஙனம் பசுக்களை சிருஷ்டிக்க முடியும்?

மநுவின் மூன்றாவது அத்தியாயத்தில், கிழங்குகள், மீன், மான், செம்மறி ஆடு, புள்ளிமான், ஆமை, முதலியவைகளின் மாமிசத்தை பிராமணனுக்கு சமர்ப்பித்து சிராத்தம் செய்வதால் இறந்துபோன ஆத்மாக்களுக்கு சாந்தியுண்டாகு மென்பதாக கூறப்பட்டிருக்கின்றது; இறந்துபோன முன்னோர்களை சந்தோஷப்படுத்த ஒருபுற மிவ்வழியைக் காட்டப்பட்டிருக்கின்றது; மறுபுறம் இறந்துபோன ஆத்மாக்கள் காய் கறிகளாகவும், மிருகங்களாகவும் பிறப்பார்களென்று கூறப்படுகின்றது. ஓர் மகன் தனது தகப்பனுடைய ஆத்மாவை சந்தோஷப் படுத்துவதற்கு வதைசெய்யப்படும் மாடு, ஆடு, முதலியதில் அவனின் தகப்பனுடைய ஆத்மா ஒருவேளை அடைக்கப்பட்டிருக்குமாயின், இக்காட்சி எவ்வகைப்பட்ட காட்சியாயிருக்கும்?. அவ்வாத்துமா மகனை நோக்கி "ஓ பாதகனே, யான் முற்பிறப்பில் செய்த தீமைகளுக்காக ஆடு, மாடு, ஒட்டகை முதலிய இனங்களில் பிறந்து இவ்விதமான அவஸ்தைப் படுகின்றேன். இதை நீ சற்றேனும் கவனியாமல் மேலும் அவஸ்தையை ஏன் எனக்குண்டுபண்ணுகின்றாய்"? எனக் கூறும் மகாபரிதாபகரமான வார்த்தைகளை சகிக்க முடியுமா?. சிரார்த்தத்துக்காக நாம் கோதுமை, கிழங்கு முதலியவைகளால் ரொட்டி சுட்டு பிராமணர்களுக்கு சமர்ப்பித்தால் நம்முன்னோர்களின் ஆத்மாக்களுக்கு சந்தோஷத்தை யுண்டாக்குமென்றும், கோதுமையை இடித்து, குழைத்து உரொட்டி சுடும்போது (ஆரியர்களின் வேதநூல்படி நவதானியங்களிலும் ஆத்மாக்களுண்டுமென்று கூறுகிறபடியால்)

மகனால் இடித்து குழைத்துச் சுடும் உரொட்டியில் அவனின் தகப்பனினது ஆத்மாவாயிருக்கக் கூடுமே, அப்போது இவன் என்ன செய்வான்?.

சகோதர சகோதரிகாள்! இவ்வித இயற்கைக்கு மாற்றமானதும், போலியானதும், வெறுக்கக் கூடியதுமான ஹிந்து, ஆரியர்களின் போதனைகளைக் கண்டே பக்திவான்களும், அறிஞர்களுமாகிய எங்கள் மூதாதையர் ஹிந்து ஆரிய மதத்தை வெறுத்து சன்மார்க்க நல்லொழுக்கத்தை கற்பிக்கும் இயற்கையுடைய மதமாகிய இஸ்லாம் மதத்தை பின்துயர்ந்தார்கள்.

## ஈடேற்றம்.

எங்கள் மூதாதைகளின் மகிமையின்மீது சுமத்தப்பட்ட பழிகளுக்கு முந்தின அத்தியாயங்களில் ஒருவாறு மறுப்பு விவரித்துள்ளேன். தற்போது மதத்தின் நோக்கமென்ன? வென்று ஹிந்து ஆரிய வேதங்களை ஒப்புக்கொண்டு நடப்பதில் இவ்விலட்சியத்தை எங்களால் அடயக்கூடுமா? வென்பதைப் பற்றியும் ஆராய்வோம்:-

மதத்தின் நோக்கமாவது இப்பூவுலகின்கண் மனிதர்கள் உயிரோடிருக்கும்வரை நேரான பாதையிற் சீராக நடந்து, சத்தியத்தையும், தர்மத்தையும் கடைவிடா வண்ணம் ஒழுகி தாம் மரணித்தபின் தெய்வ ஒளிவாகிய முடிவில்லா ஆனந்தமென்னும் ஈடேற்றம், அல்லது முக்தியைப் பெறுவதேயாகும். ஆரிய மதத்தை யாம் பின்துயர்ந்தும் நடக்கும் தினசரி விஷயங்களில் எப்படிப்பட்ட சிக்கல்களில் சிக்குண்டு தடுமாறவேண்டுமென்னும் விபரத்தைப்பற்றி முந்தின அத்தியாயங்களில் சற்று விவரித்துள்ளோம். ஹிந்து, அல்லது ஆரிய மதங்களை பின்துயர்ந்து நடப்பதால் எங்களுக்கு ஈடேற்றம் கிடைக்குமா? வென்னும் விஷயத்தைப்பற்றி ஆராய்வோம்.

மனு மகராஜர், மானிடவர்க்கத்தை நான்கு வர்ணங்களாய் பிரித்துள்ளார். அவைகளாவன:- 1. பிராம்மணர் 2. க்ஷத்திரியர் 3. வைசியர் 4. சூத்திரர் இந்நான்கு பிரிவினர்களின் கடமை முதலியவற்றையும் வெவ்வேறுகப் பிரித்து காட்டியுமுள்ளார். **அவைகளாவன:- பிராமணர்களுடைய கடமை:- வேதத்தைப்**

177542

படிப்பது, படிக்கச்செய்வது, யாகம் செய்வது, செய்விப்பது, தானம் கொடுப்பது, தானம் வாங்குவது" (மனு 1 : 88). இந்தியாவில் பிராமணர்களின் கடமைகளை நிறைவேற்றும் உண்மையான பிராமணர்கள் எவ்வளவிருக்கிறார்களென்று நாம் ஆரியர்களிடம் வினவுகிறோம். ஒருசமயம் இரண்டொரு பிராமணர்களிருக்கப்போதும் பெரும்பாலோர் அவர்களின் கடமைகளை வழிப்பயணம் அனுப்பி விட்டார்கள். பிராமணனுடைய கடமையைவிட்டு விலகியிருக்கும் பிராமணன் செத்தபின்னால் வாந்தியெடுத்த எச்சிலை சாப்பிடும் பிசாசுகளாக பிறப்பார்களென்று மனு 12 : 71 கூறுகின்றது. இத்தகைய பிசாசுக்கள் எண்ணிறந்தவை களிருக்கின்றன வென்பதற்கு அறிகுறியாக மதக்கடமையற்ற பிராமணர்களின் மூலம் நமக்கு ருஜுவாகின்றது. க்ஷத்திரியர்களைப் பார்ப்போம். **க்ஷத்திரியர்களின் கடமை.** நியாயமாய் குடிகளை காப்பாற்றுகிறது, தானம் கொடுப்பது, யாகம் செய்வது, விஷயசுகங்களில் பிரவேசிக்காமல் இந்திரியங்களை அடக்கி நடப்பது முதலியவைகளே. (மனு 1 : 89) என்றுகூறுகிற இக்கடமைகளை நிறைவேற்றி நடக்கும் க்ஷத்திரியர்களாகிய ரஜபுத்திரர்களை காணமுடியுமா? இரண்டொருவர் இருக்கலாம். ஆனால் பெரும்பாலோர் இக்கடமைகளை கைவிட்டு தவறினவர்களாகவே காணப்படுகின்றனர். க்ஷத்திரியர்களின் கடமைகளை நிறைவேற்றாத க்ஷத்திரியர்கள் மரணித்தபின், மலஞ்சாப்பிடும் பிசாசுகளின் யோனியிற் செல்வார்களென்பதாக மனு மகாராஜா் ஆக்ஞாபிக்கின்றார். (மனு 12 : 71). இவ்விஷயத்தை பற்றி ஆராயும்போதும் இராஜபுத்திரர்களில் மதானுஷ்டானம் குறைந்தவர்களின் கதியைப்பற்றி கவனிக்கிறபோதும் இராஜபுத்திரர்கள் விஷயம் பரிதாப நிலைமையிலாய்விட்டது. இனி வைசியர்களைப் பற்றி ஆராய்வோம். **வைசியர்களின் கடமை.** பசு முதலிய நாற்கால் மிருகங்களை வளர்த்தல், தானஞ்செய்தல், யாகஞ்செய்தல், வேதத்தைப் படித்தல், வியாபாரஞ்செய்தல், வட்டி வாங்குதல், வேளாண்மை செய்தல். (மனு 1—90) வைசியர்களில் அநேகர்களை நெய்கிறவர்களாகவும், வியாபாரம் செய்கிறவர்களாவும், வட்டி வாங்குகிறவர்களாகவும் காண்கின்றோம். வியாபாரம் செய்கிறதும் வட்டிவாங்குகிறதுமான தொழிலை புரிந்து வருகிறார்களாயினும் பெரும்பான்மையோர் தமது இதர கடமைகளை நிறைவேற்றா வண்ணமாகவே

காணப்படுகின்றனர். இவ்வாறான கடமைகளை விடப்பட்டவர்கள் இறந்தபின் செத்தபிணங்களை அருந்தும் பிசாசுகளாக பிறப்பார்களென்று மனு கூறுகிறார். (மனு 12:72). இவற்றுள் சிலர் வேதங்களை அறிந்தவர்களாகவுமிருக்கக்கூடும்! ஆனால் இவர்கள் மாமிசம் சாப்பிடுகிறதில்லை. இவ்விதம் மாமிசம் அருந்ாதவர்களைப் பற்றி மனுமஹா அரசர் கூறுவதாவது: சரியான முறையில் வதை செய்யப்பட்ட மாமிசத்தை எவன் சாப்பிடவில்லையோ அவன் இறந்தபின் 21 தடவை மிருகங்களின் யோனியில் போவானென்று மனு (5 : 25) கூறுகிறது. இவ்விதிகளையும் இதன்படியுள்ள அனுஷ்டானங்களையும் அனுஷ்டிக்காதிருப்பதாலேற்படும் அவஸ்தைகளையும் கணக்கிட்டுப் பார்க்கும்போது வைசியர்களின் எண்ணிக்கை பின்படலாயிற்று. அப்பால் நான்காவது வகுப்பினர்களாகிய "சூத்திரர்கள்" மட்டும் மீதியாயிருக்கின்றனர். அவர்களின் கடமைகளைப்பற்றி ஆராயுங்கால் சொல்லமுடியாத துக்கசாகரமெனும் அடிமைத்தனத்தில் ஆழ்ந்து கிடக்கின்றனர் அதாவது! பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர் இம்மூன்று வகையினருக்கும் ஊழியஞ்செய்வது சூத்திரர்களின் கடமை என்று மனு (1 : 19) கூறுகிறார். ஆனால் தற்போது ஆரியர்கள் சூத்திரர்களை (அ) சுத்திசெய்து வேதங்களை கற்பித்துக்கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். இச்சூத்திரர்கள் கற்றவர்களாய் விட்டால் இவர்களின் மலஞ்சலத்தைத் தூக்கிக்கொண்டு செல்லமாட்டார்கள், சக்கிலியர் செம்மான்களின் வேலையைச் செய்யமாட்டார்கள். இவ்விதமாக அவர்களின் வேதத்தால் நியமிக்கப்பட்ட கடமைகளை சூத்திரர்கள் செய்வதை விட்டுவிடுவார்களேயானால், மரித்தபின்பு புழுகுகளின் பிறப்பில் இந்த சூத்திரர்கள் போவார்களென்று மனு (12 : 71) கூறுகிறார். என்றால் சூத்திரர்களின் கதியும் இந்நிலைமையிலாகிவிடுகிறது.

பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர்களில் சில நல்ல மனிதர்கள் அவர்களின் வேதத்தால் நியமிக்கப்பட்ட கடமைகளை ஒருவாறு தவறாமல் நடத்திவருகிறார்களென்று வைத்துக்கொள்வோம். இச்சொற்ப தொகையினர்களுக்காவது ஈடேற்றம் கிடைத்திருக்கக்கூடுமா? தங்கள் எண்ணங்களைக் கொண்டோ, நாவைக் கொண்டோ, சரீரத்தைக் கொண்டோ, ஓர்சிறிய பாவத்தையாவது செய்யாதவர்களுக்கு ஈடேற்றங் கிடைக்கக்கூடும்,

இவ்வாறு எவராலும் நடக்க முடியுமா? ஒருபோதும் நடக்க முடியா. எனவே, இவ்விதம் நடக்கக்கூடாதவர்கள் இறந்தபின் பலவகையான கொடிய மிருகங்களின் யோனிகளிலும், பறவைகளின் யோனிகளிலும் போவார்களென்று மனுகூறுகிறார். (மனு 12 : 10) என்றால், பிராமணர்கள்முதல் சூத்திரர்வரையுள்ளவர்கள் உள்பட வனங்களில் உலாவித்திரியும் கொடிய மிருகங்களாகவும், ஆகாயத்தில் பறக்கும் பறவைகளாகவும், அசுத்தமான வஸ்துக்களில் நகர்ந்துக்கொண்டு திரியும் புழுக்களாகவுமே, ஹிந்து ஆரியர் வேதப்பிரமாணப்படி காணப்படுகிறார்கள். பாவ மன்னிப்புத் தன்மையினால் பாவங்களை கடவுள் மன்னிப்பாரென்று வேதம் கூறியிருக்குமாயின், தெரிந்தும் தெரியாமலும் செய்யப்பட்ட பாவங்களுக்கு ஆண்டவனிடம் மன்னிப்புக்கேட்டு ஒருவாறு ஈடேற்றம் கிடைக்க வழியிருந்திருக்கும். ஆனால் ஆரியர்களின் வேதத்தில் இதற்கும் வழியில்லை. ஏனெனில் கடவுள் பாவங்களை மன்னிப்பாராயின் பூமியில் பாவம் அதிகரித்துவிடுமென்று தயாநந்தர் கூறியுள்ளார். (உர்து ச. பி. 220 ப. தமிழ் ச. பி. 7 அ. 60 பக்கம்)

மேல்குறிப்பிட்டிருக்கும் ஆரிய வேத நூல்களின் மேற்கோள்களால் ஒருவருக்கும் முக்தி கிடைக்கவில்லை யென்றும், கிடைக்கப்போவதில்லை யென்றும் திட்டமாகிவிட்டது. நிற்க, சுவாமி தயாநந்தருக்காவது ஈடேற்றங் கிடைத்ததா வென்று பார்ப்போம். சுவாமி தயாநந்தர் தம்மால் வரையப்பட்ட அவரின் ஜீவிய சரித்திரத்தில் கூண்டால்கட் என்னுமிடத்திற்குப் போன சமயம் கஞ்சா சாப்பிடும் வழக்கம் அவருக்கு உண்டாய் விட்டதென்றும், இந்த கஞ்சா மயக்கத்தால் வெறிபிடித்தவராகவும் அவரிருந்ததாக எழுதியுள்ளார் சுவாமியாரின் ஜீவிய சரித்திரம் (பக்கம் 20). கஞ்சாமுதலிய வஸ்துக்கள் அசுத்தமானவைகளெனவும் அவைகளை பாவிக்கக் கூடாதென்றும், சுவாமியாரவர்கள் தமது ச. பி. 304-வது பக்கத்தில் கூறியுமுள்ளார். எனினும் கஞ்சா முதலிய வஸ்துக்களை சாப்பிடுகிறவர்கள் மறித்தபின், அசுத்தமானவைகளை சாப்பிடும் புழுக்களின் ஜென்மத்தில் பிறப்பார்களென்று மனு (12-62) கூறுகிறார். கஞ்சாபோன்ற வஸ்துக்களை உபயோகிக்கிறவர்களுக்கும் இன்ன தண்டனை என்று மனுவின் சட்டம் கூறுகின்றது. குற்றவாளியாகிய சுவாமியார் கஞ்சா

சாப்பிட்டதாக ஒப்புக்கொள்கிறார். ஆகையால், ஹிந்து ஆரிய சகோதரர்களே! சுவாமி தயாநந்தர் தற்போது எங்கிருக்கிறார்? என்று எங்களுக்கு அறிவிப்பார்களா?.

சுவாமி தயாநந்தரின் குற்றம் இதொன்று மட்டுமல்ல, அவர் தமது தகப்பனுருக்கு பொய் சொன்னதாகவும் தனது ஜீவிய சரித்திரத்தில் (11-30 ம்) கூறியிருக்கிறார். மனுவின் விதியாவது பொய் சொல்பவன் மரித்தபிறகு புழு முதலியவைகளின் யோனியில் போவான் (மனு 12—9) என்பதே. சுவாமியாரின் குற்ற ஜாப்தா இம்மட்டுமல்ல. அவர் வீட்டிலிருந்து திருட்டுத்தனமாக ஓடிப்போகும்போது சொற்ப ரூபாய்களையும் மூன்று தங்க மோதிரங்களையும் எடுத்துக்கொண்டு ஓடினதாகவும் கூறியுள்ளார் திருட்டுத்தனத்தை யுடைய பிராமணர்கள் மரித்தபின் சிலந்தி பாம்பு, பல்லி முதலியவைகளின் யோனியில் போவதாக மனு (12 - 57) கூறுகிறார். என்றால் சுவாமி தயானந்த மஹரிஷி அவர்கள் செய்த குற்றங்களுக்காக தற்போது எங்கிருக்கிறார் என்று ஆரியர்கள் எங்களுக்கு அறிவிப்பார்களா?. பாவமன்னிப்புச் சட்டத்தை சுவாமியார் ஒப்புக்கொண்டிருப்பாராயின் ஒரு சமயம் ஆண்டவனிடத்தில் மன்னிப்புக் கேட்டு ஈடேற்றம் கிடைத்திருக்கக்கூடு மென்று கூறலாம். ஆனால் பாவமன்னிப்புச் சட்டமென்பது ஒன்றுமில்லை யென்று சுவாமியாரின் (தமிழ்) ச. பி. 7—வது அத். 60—வது பக்கத்தில்) கூறுகிறார். எனவே அவருக்கு பாவமன்னிப்புமில்லை. சுவாமி தயாநந்தர், கஞ்சா, பொய், களவு முதலிய குற்றங்களுக்காக **அசுத்தமான வஸ்துக்களை சாப்பிடும் புழுக்களின்** யோனிகளிலும், பாம்பு, பல்லி, சிலந்தி முதலியவற்றின் யோனிகளிலும் சென்று பற்பல தண்டனை அனுபவித்து ஸ்நானஞ்செய்து சுத்தமாகி ஈடேற்றம் பெற்றிருக்கக்கூடும். எனினும், சுவாமி மாமிசம் சாப்பிடாதபடியால் மனுவின் விதிப்படி 21 தடவை மிருகங்களின் ஜென்மத்தில் பிறக்கவேண்டியதாயிருக்கிறதால் அதிக வயதுள்ள மிருகங்களில் ஒன்றாகிய யானையின் பிறப்பில் அவர் பிறப்பாராயின், யானைக்கு வயது 50 என்று வைத்தபோதிலும் 21 முறை அவர் பிறக்கவேண்டி யிருப்பதால் 1050 வருடங்களுக்கு மிருகமாகவே அவர் திரியவேண்டியதாகும். எனவே பிராமணர்முதல் சூத்திரர் வரையும், தயானந்தசரஸ்பதி உள்படமுக்திஎன்னும் ஈடேற்றம்பெற்றவர்எவருமில்லை யெனவே

தான்றுகிறது. இவர்களெல்லாம் ஒருபுறமிருக்க, ஹிந்து வேத சாஸ்திரப்படி பிரம்மா, விஷ்ணு, மஹாதேவர், தேவேந்திரன், அக்கினி, பிரஹஸ்பதி, விஸ்வாமித்திரர், பராசர ரிஷி, வியாசர், ஸ்ரீராமர், கிருஷ்ணன், முதலியவர்களுக்கும் ஈடேற்றம் கிடைத்ததா? இவர்களின் பட்டோலையை இந்த புத்தகத்தின் "நிருவாண சொரூப" மென்னும் அத்தியாயத்தில் பார்த்துக்கொள்ளவும். ஆரியவேத சாஸ்திரப்படி இவர்களில்சிலர் வியபிசாரஞ்செய்தவர்களாகவும், சிலர் பொய்யர்களாகவும், சிலர் பெண் திருடிகளாகவும், சிலர் மதுவருந்தினவர்களாகவும், சிலர் கன்னி ஸ்திரிகளை கற்பழித்தவர்களாகவும், சிலர் சூதாடிகளாகவு மிரு ருக்கிறார்கள். எனவே மநுமகா அரசரின் பிரமாணப் வர்களில் ஒருவருக்காவது ஈடேற்றம் கிடைத்ததா?. இல்லை! ஹிந்துவேத பிரமாணப்படி ஈசுவரர் சிலசமயம் வும், சில வேளை ஆமையாகவும், சிலசமயம் பன்றியாகவும் அவதரித்துள்ளார். என்றால் ஹிந்துவேத கிரந்தங்களால் ஈசுவரரும் யோனிச் சக்கரத்தில் சிக்குண்டு திரிகிறவராக ரூபிக்கப்படுகிறது. எனவே ஆரிய ஹிந்து வேதத்தில் ஒருவருக்கும் ஈடேற்றமில்லை.

எங்கள் மூதாதை பக்திவான்களாகவும், கற்றுணர்ந்த மேதாவிகளாகவு மிருந்தபடியால் முக்தியில்லா மதமாகிய ஆரிய ஹிந்து சமூகத்தை வெறுத்து, சன்மார்க்க நல்லொழுக்கத்தைக் கற்று முடிவில்லா ஆனந்தமெனும் முக்திபெறும் சத்திய இஸ்லா மார்க்கத்தை முழுமனதுடன் ஒப்புக்கொண்டார்கள். இந்திய முஸ்லீங்களின் முற்பிதாக்கள் இஸ்லா மார்க்கத்தை தழுவிய காரணங்களை இச்சிறிய புத்தகத்தைக்கொண்டு அறிஞர்கள் இலகுவில்விளங்கிக்கொள்வார்கள். ஆரியர்களுக்கு கொஞ்சமாவதுவெட்கம் கூச்சமிருந்திருப்பின் எங்கள் முன்னோர்கள்மீது பழி சுமத்தியிருக்கமாட்டார்கள். இறந்துபோனவர்கள் மீது பழிசுமத்துவது எல்லா நீசச்செயற்களிலும் பெரிய நீசச்செயலாகும்.

## தீர்ப்பு.

ஆரியர்களாலும், ஹிந்துக்களாலும் எங்கள் முன்னோர்கள் மீது சுமத்தப்பட்ட பழிகளுக்கு யாம் அளவுக்கதிகமாக மறுத்து உண்மைகளை காட்டியுள்ளோம். இவ்வாதாரங்களை அறிந்த, பிடிவாதமில்லாதவர்களும், உண்மையை விரும்பும் ஒவ்வொரு அறி

177542

92 N23

வுள்ளவர்களும் எங்கள் மூதாதைகள் பெண்ணைசை, மண்ணைசை பொன்னைசையாலும், வாளாயுதத்திற்கு பயந்தும் இஸ்லாத்தை ஒப்புக்கொண்டார்கள் என்று ஆரியர்களால் சுமத்தப்படும் பழிகள் ஆதாரமற்றதும், பிடிவாத குணமும், வீண் குதர்க்கங்களு மென்பது தெளிவில் புலனாகும். ஹிந்து ஆரியர்களின் வேத நூல்களைக்கொண்டே எங்கள் மூதாதைகளின் உன்னத அந்தஸ்தை நிரூபித்து காட்டுவதில் யாம் அனுகூலமடைந்து விட்டோம் என்பது மிகையாகா. எனவே இவ்விஷயத்தை யாம் அதிகமாக நீட்டிக்கொண்டு போவது அவசியமில்லை. எங்கள் மூதாதைகள்மீது, ஹிந்து ஆரிய பண்டிதர்களும், பத்திராதிபர்களும், நிரூபர்களும், சாதுக்களும், பிரசங்கிகளும், அநீதமாக பழியை சுமத்திவிட்டார்கள். எனினும், உங்களது ரிஷிகள், முனிகள், பண்டிதர்கள், சாதுக்கள் இன்னும் உங்கள் வேத நூல்களையும், புராணங்களையும், உங்கள் முன்பாக நிறுத்தி விட்டோம். இவைகளின் சாட்சிகளைக் கொண்டே நீங்கள் எங்கள் முன்னோர்கள்மீது சுமத்திய குத்துவார்த்தைகளும் பழிமொழிகளும் எவ்வளவுதூரம் உண்மை என்பதை அறிந்துகொள்வீர்கள். உங்கள் இருதயங்களில் கடுகளவாவது மார்க்க பக்தியும், உண்மையை விரும்பும் தன்மையுமிருப்பின் இவ்விஷயத்தில் உண்மையான தீர்ப்புச் செய்யுங்கள் இப்பொழுது கருமம் தெளிவாகிவிட்டது. நாம் உங்கள்முன் கொண்டுவந்து நிறுத்தியுள்ள சாட்சிகள் உண்மையான தென்றுவது, பொய்யான தென்றுவது கூறுவது உங்கள் இஷ்டம். நீங்கள் எவ்வாறுகூறினுலும் சம்மதம் உங்கள் வேத நூல்களில் கூறப்பட்டுள்ளவைகள் உண்மையாயின் இவ்வித போலி வேதத்தை நீங்கள் ஏன் பின்துயர்ந்து நடக்கிறீர்கள்? உங்கள் வேத நூல்கள் கூறுவது பொய்யாயின், இவ்வித பொய்யான விஷயங்களைக் கூறும் நூல்களை வேதகிரந்தங்களாக ஏன் நம்பியிருக்கிறீர்கள்?. இவ்வித வேதத்தைக்கொண்டு உங்களுக்கேனும் வேறு எவருக்கேனும் பிரயோஜன முண்டோ?. எங்கள் மூதாதைகள் அறிஞர்களாகவும், தெய்வபக்தி யுடையவர்களாகவு மிருந்தபடியால், இவ்வித போதனைகளை வெறுத்து, தீனுல் இஸ்லாமெனும் முக்திக்குரிய மதத்தை ஒப்புக்கொண்டார்கள். **கத் அப்லஹல் மூஃமினூன்.** (திட்டமாக, முஸ்லிம்கள் ஈடேற்றம் பெற்றுவிட்டார்கள்.)

முற்றிற்று.

# திருநபி சரித்திரம்.

நபிபெருமான் முஹம்மது முஸ்தபா ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் விரிவான ஜீவிய சரித்திரம். இப்புத்தகம் பல சரித்திர ஆதாரங்களைக் கொண்டு எழுதப்பெற்றது. நபிபெருமானவர்களின் திவ்வியகுணஒழுக்கங்களைப்பற்றி நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. இறுதியில் அவர்களின் திருமொழிகளும் இணைக்கப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி நூல் இதுவரை தமிழில் வெளிவந்ததேயில்லை. யாவரும் மிகு இலகுவில் விளங்கிக்கொள்ளுமாறு எளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது. கற்றோரால் நன்கு போற்றி புகழப்படுவது. முஸ்லிம்கள் யாவரும் இதை வாங்கி வாசித்து நாயகமவர்களின் ஒப்பற்ற ஒழுக்கங்களைத் தெரிந்துகொள்வது மிக்க அவசியத்திலு மவசியமாகும்.

உயர்ந்த வழுவழுப்பான டெம்மி 8 பக்க அளவில் 516 பக்கங்களையுடையது. காலிகோ கட்டடமுடையது.

விலை ரூ 2—4—0 தான்.

தபால்கூலி வேறு.

கிடைக்குமிடம்:

"...ல்மான்" புத்தகசாலை.

தென்காசி.